விலை ரூபா: 5.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | புரட்டாதி 18 | வெள்ளிக்கிழமை (04.10.2002) | தொலைபேசி~ 2223378 | ஒலி 289

# தலைவர் பிரபாவைச் சந்திக்க அடுத்தவாரம் அமைச்சர் மிலிந்த வன்னிக்குச் செல்வார்!

## அன்ரன் பாலசிங்கம் ~ ஹக்கீம் ~ ஹெல்கீசன் அங்கு கூடுவர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேரடியாகச் சந்தித்துப் பேசுவதற்கு, அரசின் பிரதிநிதியாக, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட அடுத்த வாரம் வன்னிக்குச் செலலவுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாவது கட்டப் பேச்சு வார்த்தை நிகழ்ச்சி நிரல் குறித்தும், வன்னிப் பகுதி புனரமைப்பு மற்றும் சமாதான முயற்சிகளின நகர்வு என்பன குறித்தும் அமைச்சர் புலிகளின் தலைவருடன் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் லண்டனில் இருந்து முதற் தடவையாக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சில தினங்களில் வருகை தருவார் எனவும், அங்கிருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் அவர் வன்னி செல்லவுள்ள தாகவும் அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தலைவர் பிரபாவை சந்திக்கும் அமைச்சர் மிலிந்த மொறகொட புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தையும் சந்தித்துப் பேசுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாளை இலங்கை வரும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனும் வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் தலைவர் மற்றும் முக்கியஸ்தர்களைச் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை விடுதவைப்புலிகளின் தலைவர் மற்றும் ஆலோசகர் ஆகியோருடன் பேச்சு நடத்துவதற்

(10ம் பக்கம் பார்க்க)

# கைதிகளின் விடுதலையில் பிரதமர் தலையிட வேண்டும்

## புலிகளின் அரசியல்துறை கோரிக்கை

(கிளிநொச்சி நிருபர்)

**நாட்டில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு அமைதிச் சூழநிலை தோன்றி மக்கள் இயல்பு வாழ்க்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இக் காலப்பகுதியில் தென்னிலங்கைச் சிறைச்சாலைகளில் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் பயங்கரவாத, அவசர காலச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு எதுவித விசாரணைகளுமின்றி நீண்டகாலம் தடுத்து வைத்திருப்பதையிட்டு நாம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தென்னிலங்கை சிறைச்சாலைகளில் நீண்ட காலம் தமிழ் இளைஞர் யுவதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

### சமாதானச் சூழலிலும் சிறையில் வாடுவதா?

சமாதானப் பேச்சு வாாத்தை நடைபெறும் காலப்பகுதியிலும் நீண்ட காலம தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ள அப்பாவித் தமிழ் இளைஞர், யுவதிகளை விடுதலை செய்ய வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வரு

எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் பல தடவைகள் சாகும்வரை உண்ணா விரதப் போராட்டங்களை நடத்திய வேளைகளில் அவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று

(10ம் பக்கம் பார்க்க)



நேற்று யாழ் செயலகத்தில் நடந்த மாநாட்டில் அமைச்சர் மகிந்த, அமைச்சர் டாக்டர் ஜயலத் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.
படம்: தவச்செல்வன்.

# மட்டு - வெலிக்கடை கைதிகளும் இன்று முதல் உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மற்றும் வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக் கோரி இன்றுமுதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

விசாரணை எதுவுமின்றி நீண்ட காலமாகத் தடுத்த வைக்கப்பட்டிருக்கும் தம்மை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கைதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை களுத்துறைச் சிறைக்கைதிகளின் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மூன்றாம் நாளும் இடம் பெற்றது. (இ)

# அமெரிக்க கிரீன் படை அதிகாரிகள்

களுமின்றி நீண்டகாலம் தடுத்து வைத்திருப்பதையிட்டு நாம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கை சிறைச்சாலைகளில் நீண்ட காலம் தமிழ் இளைஞர் யுவதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

**சமாதானச் சூழலிலும் சிறையில் வாடுவதா?**

சமாதானப் பேச்சு வார்த்தை நடைபெறும் காலப்பகுதியிலும் நீண்ட காலம தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ள அப்பாவித் தமிழ் இளைஞர், யுவதிகளை விடுதலை செய்ய வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். தென்னிலங்கைச் சிறைகளில் போதிய அடிப்படை வசதிகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் பல தடவைகள் சாகும்வரை உண்ணா விரதப் போராட்டங்களை நடத்திய வேளைகளில் அவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று

(10ம் பக்கம் பார்க்க)

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மற்றும் வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக் கோரி இன்றுமுதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

விசாரணை எதுவுமின்றி நீண்ட காலமாகத் தடுத்த வைக்கப்பட்டிருக்கும் தம்மை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கைதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை களுத்துறைச் சிறைக்கைதிகளின் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மூன்றாம் நாளும் இடம் பெற்றது. (இ)

## அமெரிக்க கிறீன் படை அதிகாரிகள் வவுனியாப் படைத்தளங்களுக்கு விஜயம்

### இராணுவ அதிகாரிகளுடன் இரகசிய மாநாடு

(வவுனியா)

அமெரிக்காவின் கிறீன்பரட் படைப் பிரிவைச் சேர்ந்த படை உயரதிகாரிகள் கொண்ட குழு ஒன்று நேற்று வவுனியாப் படைமுகாம்களுக்கு விஜயம் செய்து பாதுகாப்பு நிலவரங்களைப் பார்வையிட்டது.

இக்குழு வவுனியாவில் உள்ள முக்கிய இராணுவப் பயிற்சித் தளங்களான பம்பைமடு, கல்மடு மற்றும் பூவரசங்குளம் ஆகியவற்றுக்கும் சென்று பார்வையிட்டதாகத் தெரியவருகிறது.

வவுனியாப் படை உயரதிகாரிகளுடன் கிறீன் படைப்பிரிவு உயரதிகாரிகள் சந்திப்பொன்றை நடத்தியதாகவும், இச் சந்திப்பு மிகவும் இரகசியமாக இடம்பெற்றதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை அண்மையில் கிறீன் படைப்பிரிவு உயரதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்து உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளை இரகசியமாகப் பார்வையிட்டுச சென்றமையும் அது குறித்து வலம்புரி தகவல் வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சமாதான முயற்சிகள் நடைபெறுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அமெரிக்கப் படைகளின் இரகசிய வருகை மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. (இ)

சமாதானப் பேச்சுக்கள் வெற்றியளித்தால்

## தமிழீழ காவல்துறையினர் பொலிஸில் சேர்க்கப்படுவர்

### பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்தால் விடுதலைப்புலிகளின் காவல்துறை இலங்கை பொலீஸ் படையுடன் இணைக்கப்படும் என்று பதில் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ ஆனந்தராசா பத்திரிகையாளர் மத்தியில் நேற்றுத தெரிவித்தார்.

(10ம் பக்கம் பார்க்க)

## குடியமர அனுமதிக்காவிட்டால் தொடர் மறியல் போராட்டம்

### வலி வடக்கு - தெற்கு அமைப்புக்கள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதில் அரசாங்கம் காட்டி வரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து எதிர்வரும் 18ம் திகதி தொடக்கம் தொடர் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு வலி வடக்கு - தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இது விடயம் தொடர்பாக ஆராயும் பொருட்டு ஒன்றியத் தலைவர் எஸ்.குமாரவேல் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

(10ம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இருந்து கடல் வழியாக 170 புலிகள் மட்டக்களப்பு சென்றனர்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டாவது கடற் பயண நடவடிக்கைகள், நேற்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவில் இருந்து நான்கு படகுகளில் 170 புலிப் போராளிகள் திருகோணமலை ஊடாக, மட்டக்களப்பு வாகரையைச் சென்றடைந்தனர்.

இப் போக்குவரத்துக்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வழித்துணை வழங்கியது.

காலநிலை சீரின்மை காரணமாகவே கடற்பயணத்தில் காலதாமதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படு

(10ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்மா அதிபராக ஆனந்தராஜா பதவியேற்பு

(கொழும்பு)

இலங்கையின் 26வது பொலிஸ்மா அதிபராக ரி.ஈ.ஆனந்தராஜா நேற்று பதவி ஏற்றார்.

1967ம் ஆண்டு உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பொலிஸ் சேவையில் சேர்ந்த ரி.ஈ.ஆனந்தராஜா பிரதி பொலிஸ்மா அதிபராகவும், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராகவும் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்றார்.

2000 -2002ம் ஆண்டு காலப் பகுதியில் மூன்று தடவைகள் பதில்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இறந்தவர்களின் சாபத்திலிருந்து விடுபட
# மஹாளய பக்ஷத்தில் பிதிர்க்கடன் செய்வது
# இல்வாழ்வானின் முக்கிய கடமையாகும்

சிவாகம கலாநிதி

**சிவஸ்ரீ**

**வை. மூ. பரமசாமிக்குருக்கள்**

(உத்தர கோவை)

பிரதி வருஷமும் பாத்ரபத மஸத்தின் கிருஷ்ண பக்ஷத்திற்கு மஹாளயபக்ஷம் என்ற விஷேச நாமம் உண்டு. பெரும்பாலும் கன்யாமாஸம் புரட்டாதி இதொடு சேரும் இப்பக்ஷத்தில் திதிகள் விருத்தியாகி வந்தால் பதினாறு நாட்களும், சமமாக இருப்பின் பதினைந்து நாட்களும் குறைந்து வரின் பதினான்கு நாட்களும், மஹாளயபக்ஷத்தில் சேரும். இப்பக்ஷத்தில் ஒவ்வொரு நாளும் சிரார்த்தம் செய்யவேண்டுமென்று சாஸ்திரம் கூறுகின்றது. தற்காலங்களில் அம்மாதிரி செய்யமுடியாதைதக் கருதி பிதா, மாதா இறந்த திதியுடன் கூடிய ஓர் நாளில் மாத்திரம் (தசமிக்குள்) பக்ஷசிரார்த்தம் செய்யும் அனுஷ்டானம் இருந்துவருகிறது.

இம் மஹாளய பக்ஷத்தில் யமதர்மன் எல்லாப் பிரேதங்களையும், பிதிருக்களையும் தன்பட்டணத்திலிருந்து இப்பூவுலகிற்குப் போகும்படி விடுவித்துத் தன்நகரைக் காலிசெய்துவிடுகிறான். அப்பிதுருக்கள் இங்குள்ள தத்தம் புத்திரர் முதலியோரிடமிருந்து அன்ன பானாதிகளையும் முக்கியமாக பாயாசத்தை மதுவையும் அபேக்ஷிக்கின்றனர். ஒருவன் அமாவாசைவரையிலும்பக்ஷசிரார்த்தம் செய்து அவர்களைத் திருப்தி செய்யாவிடில் அவர்கள் அமாவாசைத்தினம் அவன் வீட்டின் வாயிலில் காத்திருப்பார்கள்.

அன்றும் சிரார்த்தம் செய்யாவிடில் அவர்கள் யம நரகத்திற்குப் போகாமல், கார்த்திகைமாதம் (விருச்சிகம்) வரையில் இங்கேயே தங்கியிருந்து சிரார்த்தத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசையினால் துலா மாதத்திலும்கூட (ஐப்பசி) பக்ஷசிரார்த்தம் செய்யும் வழக்கம் இருந்து வருகிறது. அப்போதும் சிரார்த்தம் செய்யாதவனை அவர்கள் கோபத்துடன் சபித்துவிட்டு யமநகரம் சென்றுவிடுகின்றனர்,

ஆகையால் மஹாளயபக்ஷத்தில் காய், கனி, கிழங்கு முதலியனவற்றினால் அல்லது ஜலதர்ப்பணம் முதலியவைகளினாலாவது பிதுருக்களைத் திருப்தி செய்து பிதிருசாபத்தினின்று விடுபடுவது மிக அவசியம். பக்ஷசிரார்த்தம் ஸமஸ்த பிதிருக்களையும் உத்தேசித்துச் செய்யப்படவேண்டும் இவ்விடயம் யாவும் அத்ரிஸ்மிருதி யக்ஞவல்க்யஸ்மிருதி, தர்மஸிந்து முதலிய நூல்களில் விபரிக்கப் பட்டிருக்கிறது. ஸமஸ்தபிதிருக்களையும் உச்சரிக்கும் கிரமத்தை ''ஸம்ஸ்காராத்நமாலா'' என்ற சுலோகத்தில் காணலாம்

இப்பக்ஷத்திய சதுர்த்தசிக்கு சஸ்திரஹத சதுர்த்தசி எனப் பெயர். அன்று தான் ஆயுதங்கள், வெட்டுக்காயம் முதலியவைகளால் இறந்தவர்களைக் குறித்துச் சிரார்த்தம் செய்ய வேண்டும். இப்பக்ஷத்தில் மஹாபரணி, மத்தியாஸ்டமி என்பவை சிறந்தபுண்ணிய தினங்களாகும்.

எனவே மஹாளயபக்ஷத்தில் பிதிர்க்கடன்களைச் செய்து பிதிர் சாபத்திலிருந்து விடுபடுவதுஒவ்வொருவரினதும் கடமையாகும்

## அமெரிக்காவில் இருந்து பால்மா

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு குழந்தைகளுக்கான பால்மா இலவசமாகக்கிடைக்கவுள்ளது.

கூட்டுறவுஅமைச்சர் ஏ. ஆர். எம். ஏ. காதர் அமெரிக்க தூதரகத்தினூடாக அமெரிக்க அரசிடமவிடுத்தவேண்டுகோளையடுத்தே இப்பால்மா இலவசமாககிடைக்கவுள்ளது.

கூட்டுறவுக்கடைகள் மூலம் இப்பால்மா பகிர்ந்தளிக்கப் படவுள்ளது.

இதேவேளை இம்முறை இலங்கைக்குஉயர்ரகத்திலான கோதுமைமா அமெரிக்காவிலிருந்து கிடைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

(உ-3)

## குடியேற அனுமதி

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களைமீளக்குடியமர்துதற்கு படைத்தரப்பினர் நேற்று முதல் அனுமதி வழங்கியுள்ளனர். மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து நேற்றையதினமே அப்பகுதிக்குச்சென்ற பொதுமக்கள் தமது வீடுகளைப்பார்வையிட்டதுடன் மீளக்குடியமரும் முயற்சிகளிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் அப்பகுதிக்குச் சென்று பொதுமக்களுடன் கலந்துரையாடினர்.

(த-77 43)

## நேரடி பஸ்சேவைநடத்தும் திட்டம் கைவிடப்பட்டது

### தனியார் பஸ் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் இருந்துயாழ் குடாநாட்டிற்கு நேரடிபயணிகள் பஸ்போக்குவரத்துச் சேவையை நடத்தும் தமது திட்டத்தைக் கைவிட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தலைவர் கெமுனு விஜேரட்னா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ் குடாநாட்டுக்கு பயணிகள் பஸ்சேவையை நடத்தஎமக்கு விருப்பம் இருந்தபோதும் நடைமுறைச்சிக்கல் பல இருப்பதினால் இப்போக்குவரத்துச்சேவையை நடத்த முடியாதிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் கொழும்பில் இருந்து ஓமந்தைவரைக்கும் முகமாலையில் இருந்துயாழ்ப்பாணத்துக்கும் பயணிகள் பஸ்சேவையை நடத்த திட்டமிட்டுள்ளோம் என்றும் கெமுனு விஜேயரத்தினா தெரிவித்துள்ளார்.

(ம)

## யாழ்பல்கலையில் மனிதஉரிமைகல்வி கற்கைநெறி ஆரம்பிக்கப்படும்

### மனிதஉரிமைஆணைக்குழு தலைவர்தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் மிகமோசமாக யுத்தம் இடம்பெற்றதனால் மனிதஉரிமை விடயங்களை பேணமுடியாமல் போய்விட்டதென்று மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஹொட்பிறிகுணதிலக கவலைவெளியிட்டார்.

நேற்று யாழ்செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஹொட்பிறி இதனைத் தெரிவித்தார்.

அங்குஅவர் மேலும் பேசுகையில்-

வடபகுதியில் மனிதஉரிமைக் கல்வியை யாழ்பல்கலைக்கழகத்தில் ஒருகற்கைநெறியாக ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

கொழும்பில் உள்ளது போன்று யாழ்ப்பாணத்திலும் மனிதஉரிமைக் கல்வியை செயற்படுத்தவுள்ளோம்.

யாழ் குடாநாட்டில்யுத்தத்தினால் ஏற்பட்டஅழிவுகள் காரணமாக மனிதஉரிமையினை பாதுகாக்க முடியாமல் போனமை துரதிஸ்டவசமானதாகும்.

ஆனால் தற்பொழுதுமனித உரிமை ஆணைக்குழு குடாநாட்டில் இடம்பெறும் மனித உரிமைமீறல்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அத்துடன் அரசசார்பற்ற சமூகநலன் பேணும் அமைப்புக்களுடன் இணைந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகளை வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை மனிதஉரிமை தொடர்பான விடங்களை ஒவ்வொரு பொதுமகனும் நன்கு அறிந்து கொள்ளும் வகையில் நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாகவும் ஹொட்பிறி மேலும் கூறினார்;

(இ-6)


அன்பு மாணவர்களே!



உங்களின் கவிதைத் திறனை வெளிப்படுத்த நவராத்திரிக் காலத்தில்

**வலம்புரியில் வெளிவரும்**

**நவராத்திரி பாமாலைக்கு**

4 தொடக்கம் 8 வரிக்குட்பட்ட கவிதைப் பாமாலைகளை அனுப்பி வையுங்கள்

மு. குறிப்பு மாணவர்களுக்கு மட்டும் இதில் சந்தர்ப்பம் வழங்கப்படுவதால் மாணவர்கள் தமது சொந்த ஆக்கத்தை மட்டுமே அனுப்பி வைக்கவேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

நவராத்திரி பாமாலை
வலம்புரி
இல. 15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.


## சமாதானத்துக்குறுதியான அடித்தளம்இடப்பட்டுள்ளது

### ஜப்பான் தூதுவர் தெரிவிப்பு

(புத்தளம்)

அரசும் விடுதலைப்புலிகளும் தாய்லாந்தில் நடத்திய சமாதானப் பேச்சுவார்த்தையானது இலங்கையில் நிரந்தர சமாதானத்துக்கான வசதியான அடித்தளமொன்றை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கைக்கான ஜப்பான்நாட்டு தூதுவர் செய்ச்சிரேஒட்சுகா நேற்று புத்தளம் மணல்குன்று பகுதியில் இடம்பெற்றதிறப்பு விழா வைபவமொன்றில் கலந்துகொண்டு பேசுகையில் கூறியுள்ளார்.

அவர் அங்குதொடர்ந்தும்உரையாற்றுகையில்இரண்டாம் உலகமகாயுத்தத்தின் போது தரைமட்டமாக்கப்பட்ட ஜப்பான்நாட்டின் நிலையை அவதானித்து ஜப்பான்மீது அடக்குமுறைகளை மேற்கொண்டவர்களுக்கு எதிராக கண்டனக்குரல் எழுப்பியவர் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்கனா

1951ம் ஆண்டுமுதல் இலங்கையுடன் இராஜதந்திரஉறவுகளை ஜப்பான் கொண்டுள்ளது.

கொடிய19வருட காலயுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடகிழக்கை மீளக்கட்டியெழுப்ப ஜப்பான் அரசுஉதவிகளை செய்யவுள்ளது.

இலங்கையில் ஜப்பான்நாட்டின் அனுமதியுடன் வன்செயல் தடுப்புக்கான ஜப்பான் மையம்என்ற அரசசார்பற்ற நிறுவனம் பலசமூகநலத்திட்டங்களை இலங்கையில் மேற்கொள்கின்றது என்றார்.

இந்நிகழ்வில் வன்செயல் தடுப்புக்கான ஜப்பான் மையத்தின் இலங்கையில் பிரதிநிதி இஸ்ஸிக்கோ புத்தளம் நகரசபை தலைவர் எம். எச். ஹுசைன் உட்பட பலரும் உரையாற்றினர்.

(உ)

### தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில்

# அரசு இரட்டைத்தனமாகவும் சுயநலத்துடனும் செயற்படுகிறது

## கண்டிக்கிறது புதிய ஜனநாயகக்கட்சி

(கொழும்பு)

**தமிழ் அரசியல் கைதிகள் தங்களை விடுதலை செய்யக்கோரி நடத்தி வரும் உண்ணாவிரதப் போராட்டம் முற்றிலும் நியாயமானதாகும அதனை மறுப்பதற்கோ அன்றி சாக்குப் போக்குக் கூறி இழுத்தடிப்பதற்கோ எவ்வித தார்மீக நியாயமும் அரசாங்கத் தரப்பிலிருந்து கூற முடியாது.**

எனவே உள்துறை அமைச்சரோ அன்றி பாதுகாப்பு அமைச்சரோ உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை பற்றிய உறுதியான உத்தரவாதத்தை உடன் வழங்க வேண்டும் அதைவிட வேறுவழி இல்லை என்பதை அரசாங்கம் உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதை எமது கட்சி வற்புறுத்துகின்றது.

இவ்வாறு புதியஜன நாயகக் கட்சியின் அரசியல் குழுசார்பாக அதன் பொதுச்செயலாளர் சி.கா செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், இன்றைய சூழலில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது விடுதலைப் புலிகளைக் கூட சிறைகளில் இருந்துவிடுவித்து படைவீரர்களை மீட்டுள்ளது.

அதேவேளை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவும் உதவியும் வழங்கியதாகக் கூறப்பட்டு நீண்ட காலமாக விசாரணை இன்றி சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை இன்னும் விடுவிக்காது வைத்திருப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்றவிடயத்தில் அரசாங்கம் இரட்டைத் தனமாகவும் தனக்கு ஏற்றதாகவும் நடந்து கொள்கிறதா என்ற சந்தேகமே ஏற்பட்டுள்ளது.

இத்தகைய அணுகு முறை அரசாங்கத்தில் உள்ளவர்களது பேரினவாதநிலைப்பாட்டையே வெளிப்படுத்தி நிற்கிறது எனவே, தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையும் அதற்கான உண்ணாவிரதமும்நியாயமானதும் தேவையானதுமாகும்.

அரசாங்கம்சமாதான முன்னெடுப்பில் நேர்மையாக நடந்து கொள்வதற்கான பற்றார்வத்தை மேலும் வெளிப்படுத்துவதற்கு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வரும்தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்றியே தீரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## சிறுவர்களை இயக்கத்தில் இணைப்பதை புலிகள் நிறுத்தியுள்ளனர்

### கண்காணிப்புக் குழுத்தலைவர்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தங்களது படையணிகளில் இருந்து சிறுவர்களைத் திருப்பியனுப்புகிறார்கள்; அத்துடன், தமது இயக்கத்தில் சிறுவர்களை சேர்ப்பதை நிறுத்தியுள்ளார்கள்.

சர்வதேச யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியுறுஹெவ் டே கடந்த திங்களன்று இடம் பெற்ற சர்வதேச செய்தியாளர்களுடனான சந்திப்பின் போது இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது;

விடுதலைப்புலிகள் தமது படையணிகளில்இருந்து சிறுவர்களை அகற்றத்தொடங்கியுள்ளனர். இயக்கத்தைச் சேர்ந்த சிறுவர்களை தத்தம் வீடுகளுக்குச் செல்லுமாறு ஊக்குவித்தும் வருகின்றனர் என்று குறிப்பிட்டார். (உ)

## பாடசாலை மட்டக்கல்வி அபிவிருத்தி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான பாடசாலைமட்டக் கல்வி அபிவிருத்திச் செயலமர்வு நாளை சனிக்கிழமைமுதல் விடுமுறை தினங்களில் இடம் பெறவுள்ளது

சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கைதடி முத்துக் குமாரசாமி வித்தியாலயம், மட்டுவில் சமலாசினி வித்தியாலயம், நாவற்குழி மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம்மகாவித்தியாலயம், மிருசுவில் றோ. க. த. க. பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், வரணிமகாவித்தியாலயம் ஆகியவற்றில் இச்செயலமர்வு இடம்பெறவுள்ளது.

பாடசாலைகுழு அடிப்படையில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தங்களுக்குரிய நிலையங்களில் சமுகமளிக்குமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (உ)

## 15 இலட்சம் இழப்பு

(வவுனியா)

அண்மையில் வவுனியாவில் வீசிய மினி சூறாவளியினால் நகரப் பகுதியில் 15 இலட்சம் ரூபாவிற்கு மேல் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக கணக்கிடப் பட்டுள்ளது.

இதேவேளை, குருநாகல்பகுதிகளிலும் தொடர்ச்சியான மழை பெய்வதுடன், பலத்த காற்றும் வீசுவதாக கூறப்படுகிறது. (உ-10)

## அம்பாறை நகரில் கைத் தொழிற் பேட்டை

(கொழும்பு)

அம்பாறை நகரில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் கைத்தொழிற் பேட்டை அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகி இருக்கின்றன.

நாட்டில்ஏற்பட்டுள்ள அமைதியான சூழ் நிலையில், இளைஞர்களும் யுவதிகளும்தொழில் வாய்ப்பு பெற்றுக் கொள்ள வாய்ப்பாகவே இத் தொழிற் பேட்டை அமைக்கப்படுகின்றன.

அமைச்சர் பி.தயாரட்ணவின் நடவடிக்கைகளுக்கு அமைய இத் திட்டத்திற்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை ஆலோசனை, பயிற்சி, கடன் உதவி என்பனவற்றை வழங்க முன் வந்துள்ளது.

முதலீட்டாளர்கள் புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க முன் வந்திருக்கின்றதுடன் இது வரை 15 முதலீட்டாளர்கள் தமக்கு தேவையான இடங்களை தெரிவு செய்து கட்டடங்களை அமைக்க உத்தேசித்திருப்பதாகவும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-7)

## கலைமகள் விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை அறநெறிப் பாடசாலையின் கலைமகள் விழா எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.00 மணிக்கு ஏழாலை ஆத்ம ஜோதி தியான மணி மண்டபத்தில் தலைவர் சிவ. சண்முகவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்துசமயவிவகார அமைச்சின் யாழ் பிராந்திய உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (உ-3)

## போதை பொருள் பாவனை இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஏனைய நாடுகளை விட போதைப் பொருள், மதுபானம் ஆகியவற்றின் பாவனை அதிகரித்திருப்பதாக அகில இலங்கை மது எதிர்ப்பு சங்கம் தெரிவித்துள்ளது.

போதைப் பொருள் மதுபானம் ஆகியவற்றின் பாவனையைக் குறைப்பதற்கு அரசாங்கமும் அரசியல் வாதிகளும் மற்றும் பாதுகாப்புத் துறையினரும் கூடுதல் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் சங்கத்தின் ஆலோசகர் மாதுறுபாய சோடிக தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

உல்லாசப் பயணிகளுக்கு மாத்திரமே மதுவின் பகைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றன எனவும்,

முன்னர் வழங்கப்பட்ட அனுமதி பத்திரங்கள் பற்றி விசேட குழு விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் சலால் திணைக்கள ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

சட்டவிரோத மான முறையில் மது விற்பனை செய்வதற்கான அனுமதியை பெற்ற 45 சாராய விற்பனை நிலையங்கள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை துரிதமாக விசாரிக்குக!

### சட்டமா அதிபரிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளைதுரிதமாக விசாரிக்குமாறு சட்டமா அதிபரைக் கேட்டுக் கொண்டிருப்பதாக நீதி மறு சீரமைப்பு தேசிய நல்லிணக்க அமைச்சர் டபிள்யூ ஜெ.எம். லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

களுத்துறை மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் உண்ணா விரதம்இருந்துவரும் தமிழ் அரசியல் கைதிகள் பற்றிக்கருத்துத் தெரிவித்த போதுஇவ்வாறுகூறியுள்ளார்.

மேலும் கூறுகையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடைபெறும் இந்தச்சூழ்நிலையில் இவர்களதுவழக்குகள் துரிதமாக விசாரிக்கப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை உள்துறை அமைச்சர் யோன் அமரதுங்க இவ்விடயம் பற்றி சட்டமா அதிபர் திணைக்களமே முடிவு செய்ய வேண்டும் என்றுதெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறு இருக்க களுத்துறை, வெலிக்கடை சிறைச்சாலைகளில் உண்ணா விரதம் இருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகளின் உடல் நிலை பாதிப்பு அடைந்து வருவதாகவும் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உண்ணா விரதத்தை மேற்கொண்டு வரும்கைதிகள் அரச பிரதிநிதி ஒருவர் தங்களுடன் பேசும் வரைதாம் உண்ணா விரதத்தை கைவிடப்போவதில்லை என்று உறுதிபடக்கூறியுள்ளனர். (உ-10)

## முதியோர் தினம்

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்க முதியோர் தின விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கமண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (உ)

## பாக். வர்த்தக அமைச்சர் பிரதமரைச் சந்தித்து பேச்சு

### விரைவில் வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கையும்பாகிஸ்தானும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் விரைவில் கைச் சாத்திட இருக்கின்றனஇதன்பொருட்டு பாகிஸ்தான் வர்த்தக அமைச்சர் அப்துல்ரசாத் தாகூர் நேற்றைய தினம் இலங்கை வந்துள்ளார்.

அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்து பேசிய அப்துல் ரசாத் இரசாயனம் உணவு பதப்படுத்தல் போன்ற துறைகளில் இரண்டு நாடுகளும் ஒத்துழைப்பதற்குபெரும் வாய்ப்புகள் இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானதும் இலங்கைக்கான பாகிஸ்தான் ஏற்றுமதி 5 கோடி டொலர்களால் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதும், தற்பொழுது 7 கோடி 50 இலட்சம் டொலருக்கு ஏற்றுமதி நடைபெறுகின்றதும் குறிப்பிடத்தக்கது;

பாகிஸ்தான் அமைச்சர் அப்துல் ரசாத் தாகூருடன் மேலும் 20 பாகிஸ்தான் வர்த்தகர்கள் கொழும்பு வந்துள்ளனர்.

இவர்கள் இலங்கை வர்த்தகர்களுடன் கூட்டு முயற்சியை ஆரம்பிப்பது தொடர்பான பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவர் எனஎதிர் பார்க்கப் படுகிறது. (உ-7)

# ஈராக்கின் படையைப் பயன்படுத்தியே சதாமைக் கொலை செய்ய புஷ் திட்டம்

(வாஷிங்டன்)

ஈராக் அதிபர் சதாம ஹுசைனை அவர்களது படைகள் மூலமாகவே படுகொலை செய்யும் சதித்திட்டம் பற்றி அமெரிக்கா ஆலோசித்து வருகிறது.

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனை ஆட்சியிலிருந்து அகற்றியே தீருவது என்ற முடிவில் அமெரிக்க அதிபர் புஷ் அதற்கான அனைத்து முயற்சிகளிலும் இறங்கியுள்ளார்.

ஈராக்கின் ஒவ்வொரு அங்குலத்தையும் சோதனையிட அந்நாடு அனுமதிக்க வேண்டும். மறுத்தால் அந்நாட்டில் ஏழு நாட்களுக்குள் தாக்குதல் நடத்தப்படும் என்ற வரைபுத் தீர்மானத்தை அமெரிக்காவும், பிரிட்டனும் ஐ.நாவிடம் அளித்துள்ளன.

இந்த வரைபுத் தீர்மானத்திற்கு ஐ.நா ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் புஷ் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், வாஷிங்டனில் அமைச்சரவை உறுப்பினர்களிடையே நேற்றுப் பேசிய புஷ், ஈராக் தன்னிடம் உள்ள பேரழிவு ஆயுதங்களை அழிக்காவிட்டால் அந்நாட்டின மீது தாக்குதல் நடத்தப்படும் என்றார்.

மேலும், மறைமுக வழிகளில் சதாம்ஹுசைனை அழிக்க அமெரிக்கா இறங்கியுள்ளது. ஈராக் படையினரைப பயன்படுத்தியே அவரைப் படுகொலை செய்வது பற்றி அமெரிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

அத்துடன் அமெரிக்காவிற்கு ஆதரவாகக் களமிறங்கிய பிரிட்டனும் 2ஆயிரம் படைவீரர்களுடன் மூன்று வாரகாலப் போர் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளது. (சு)

# விமான எச்சரிக்கைக் கருவி ஈராக்கிற்கு விற்பனை

## உக்ரேன் மீது குற்றச்சாட்டு

(கீவ்)

ஐக்கிய நாடுகளின் தடை உத்தரவை மீறி விமானம் வருவதை முன் கூட்டியே அறிவிக்கும் கொன்சிக்கா எச்சரிக்கைக் கருவியை உக்ரேன் ஜனாதிபதி வியோனின் குஜ்மா ஈராக்கிற்கு விற்பனை செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் பற்றி ஆராய விசாரணையாளர் குழுவொன்றை உக்ரேனுக்கு அனுப்பவுள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது. எனினும், இவ்வாறான எச்சரிக்கைக் கருவிகளை தாம் விற்பனை செய்யவில்ல என்றும், இது பற்றி விசாரணைகளை மேற்கொள்ள வருமாறும் அமெரிக்கா மற்றும் ஐக்கியநாடுகள்சபைக்கும் உக்ரேன ஜனாதிபதி குஜ்மா அழைப்புவிடுத்துள்ளார்.

ஏற்கனவே இவ்வாறான கருவிகளின் ஒரு தொகுதி விற்பனை செய்தமையை குஜ்மா அங்கீகரித்ததை அவரது முன்னாள மெய்ப்பாது காவலர் ஒருவர் ஒலிப்பதிவு செய்துள்ளமை தெரியவந்ததை அடுத்தே அமெரிக்கா கடந்த மாதம் உக்ரேனுக்கான உதவியை இடைநிறுத்தியமை தெரிந்ததே. (சு-4)

# ஈராக்கில் விமானத்தாக்குதல் பொதுமக்கள் மூவர் படுகாயம்

(பக்தாக்)

ஈராக்கின் தென்பகுதியில் அமெரிக்கா பிரிட்டிஷ் விமானங்கள் நேற்று முன்தினம் தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

இத்தாக்குதல் மக்கள் நடமாடும் இடங்களில் நடைபெற்றதால் 3பொது மக்கள் படுகாயமடைந்துள்ளதாக ஈராக் கூறியுள்ளது.

எனினும், ஈராக்கிய இராணுவ நிலையமொன்றின் மீதே தாக்குதலை நடத்தியதாக அமெரிக்கா மத்திய ஆணையகம் கூறியுள்ளது.

ஈராக் மீது அமெரிக்காவும் பிரிட்டிஷ் அரசும் கடந்தமாதம் றொக்கெட் தாக்குதல் நடத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-4)

WORLD NEWS உலக தரிசனம்

# சென்னையில் டெஸ் கிரிக்கெட

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் விளையாடும் சென்னை டெஸ்ற் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக தமிழ்நாடு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (சு-04)


# காஷ்மீரில் வெடிகுண்டுத் தாக்குதல் 10பேர் பலி; 24பேர் காயம்

(காஷ்மீர்)

காஷ்மீர் தீவிரவாதிகள் பேருந்து ஒன்றின் மீது மேற்கொண்ட வெடிகுண்டுத் தாக்குதலின் 10பயணிகள் கொல்லப்பட்டதுடன் 24பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக மருத்துவமனைவட்டாரங்கள் தெரிவித்தன.

காஷ்மீர் தேர்தலையடுத்து காஷ்மீர் தீவிர வாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 30பேர் வரை கொலலப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



ஜப்பான் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் உள்ள நாகசாகி துறைமுகத்தில் டயமண்ட்ப்ரின் செஸ் கப்பலில் திடீரென தீப்பற்றியது. தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைக்கும் வீரர்கள் ஈடுபட்டுள்ளதை படத்தில் காணலாம்.

# தென்னாபிரிக்காவில் தனியார் மயமாக்கலை எதிர்த்து தொழிற்சங்கங்கள் போராட்டம்

## 15வீதமான தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பவில்லை


(கேப்டவுன்)

தென்னாபிரிக்காவில் தனியார் மயக கொள்கையை எதிர்த்து அந்த நாட்டின் தொழிலாளர் சங்கங்கள் நேற்று இரண்டாவது நாளாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

தென்னாபிரிக்காவில் தொழிலாளர் சங்கங்களின் ஒருங்கிணைப்பான கலைற்றோ ஆளும் ஆபிரிக்கக் காங்கிரஸ் ஆட்சியில் அங்கம் வகித்தாலும் அரசின் தனியார் மயமாக்கல் கொள்கையை எதிர்த்து வருகிறது.

நேற்று மாலை இடம்பெற்ற போராட்டம் முழுமையாகக் கடைப் பிடிக்கப்படாவிட்டாலும் 15வீதமான தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பவில்லையென தென்னாபிரிக்கத் தொழிலாளர்கள் கழகம் அறிவித்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர், தற்போதைய அமைச்சுப் பதவிகளில் அங்கம் வகித்து வருகின்றனர் எனினும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அரசுககும். அதற்கு ஆதரவு அளித்து வருகின்ற இடது சாரிக் காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் கருத்து மோதல் ஏற்பட்டிருப்பதையே, இப்போது நடந்துவரும் வேலை நிறுத்தப் போராட்டம் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (சு)



இஸ்ரேல் தீயணைப்பு வீரர்கள், எண்ணெய்ப்பாதுகாப்பு ஆலை ஒன்றில் வைக்கப்பட்டுள்ள பெரிய எண்ணெய்ப் பாதுகாப்பு உருளையை விபத்துக்களில் இருந்து தவிர்க்கும் பயிற்சியில் ஈடுபட்டுள்ள காட்சி

# அளவுகடந்த மூடநம்பிக்கை பரிதாபத்தில் முடிந்தது

## மதுரையில் சம்பவம்

(புதுடில்லி)

மதுரையில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த நால்வர் மூட நம்பிக்கை காரணமாக தற்கொலை செய்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கடவுள் தம்மைக் காப்பாற்றுவார் என்ற அளவு கடந்த நம்பிக்கை காரணமாக இவர்கள் தற்கொலை செயதுள்ளனர். இருவர் தூக்குமாட்டியும், இருவர்நஞ்சருந்தியும் இறந்துள்ளதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.


மதுரை மீனாட்சிப் பழைய காலனிப் பகுதியில் இடம்பெற்ற இத் துயரச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது;

தற்கொலை செய்து கொண்ட வீரமணிகண்டனும் அவரது மனைவி மற்றும் இரண்டு மைத்துனர்களுடன் கன்ராக்ட் தொழில் செய்து வந்தவர். இத் தொழிலில் நல்ல வருமானம் கிடைத்தது. வீட்டில் தினமும் பூசை, பஜனைப்பாடல்கள் என்று எப்போதும் ஒரே பக்தி மயம்தான்.

நேற்றுக் காலை வீரமணிகண்டனின் தந்தையார் அவரைப் பார்க்க வீட்டுக்கு வந்த போது நீண்ட நேரமாகியும் கதவு திறக்கப்படவில்லை. ஜன்னலைத் திறந்து பார்த்த போது வீட்டுக்குள் வீரமணிகண்டனும் அவரது மனைவி கீத்தா மற்றும் மைத்துனர்களும் பிணமாகக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இரண்டு மாதங்களுக்கு முன் இவர்கள் ஆளுக்கு பத்து தூக்க மாத்திரை உட்கொண்டனர். ஏன் இப்படிச் செய்தாய் எனக் கேட்ட போது, எனது தெய்வம் எங்களுக்கு சாவே இல்லையெனக் கூறியிருக்கிறார். அதனால் எம்மை காப்பாற்றி இருக்கிறார் என மணிகண்டன் கூறியதாக அவரது தந்தை காவல் துறையினருக்கு தெரிவித்தார்.

கடவுள் தம்மைக் காப்பாற்றுவார் என்ற அளவுக்கதிகமான நம்பிக்கை வைத்ததே வீரமணிகண்டன் குடும்பத்துடன் தற்கொலை செய்யக் காரணமாயிற்று என்று பொலிசார் தெரிவித்துள்ளனர். பொலிசார் வீட்டின் கதவை உடைத்து நான்கு பேரின சடலங்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.



22.09.2002 அன்று திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினரால் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் கலாசார மண்டபத்திற்கு 25பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம். நல்லை குரு முதல்வரிடம் லயன்ஸ் கழக உறுப்பினர் வைத்திய கலாநிதி பிரதீபன் பிளாஸ்டிக் கதிரையை வழங்குவதையும் அருகாமையில் திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தலைவர் லயன் கலாநிதி க.குணராசா, லயன் எஸ்.எஸ் தங்கராஜா மற்றும் திருநெல்வேலி வட்ட லயன்ஸ்கழக செயலாளர் ஸ்ரீதரன் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.



இலங்கைப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சிக்கு கொழும்பில் இருந்து வந்துள்ள பயிற்சியாளர் திரு.எஸ்.எச்.கே. மொகிடீன் அவர்கள் யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதைப் படத்தில் காணலாம். யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஒவ்வொருபாடசாலைகளுக்கும் சென்று பயிற்சியளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# முதலீடு செய்ய ஜப்பானுக்கு அழைப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான யுத்தநிறுத்தத்திற்குப் பின்னர் இலங்கையில் பாதுகாப்பான முதலீட்டுக்கான சூழ்நிலை உருவாகியிருப்பதால் இங்கு உத்தியோகபூர்வ முதலீடுகளை மேற்கொள்ளுமாறு ஜப்பானைக் கோரவிருப்பதாக தாய்லாந்துப் பேச்சில் கலந்துகொள்ளும் அரசு தரப்பு பிரதிநிதிக் குழுத் தலைவரான அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சமாதானத்தை அண்மித்து விட்டதால் தமதுகோரிக்கை நியாயமானதுஎனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (உ)

# இன்று ஒரு தகவல்

## இருவகை மன்னர்கள்

இந்த உலகத்தில் எத்தனையோ ராஜாக்கள் வந்திருக்கிறார்கள், போயிருக்கிறார்கள்! சிலர் மிகவும் கெட்டிக்காரர்களாக இருந்திருக்கிறார்கள் சிலர் விபரம் தெரியாதவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அரசன் எவ்வழி அவ்வழி குடிகள் என்பார்கள். அதனால், அரசன் நல்லவனாக இருந்தால் ஜனங்களும் நல்லவிதமாக இருப்பார்கள்.

ஒரு ராஜா இருந்தார். அவரும் அவருடன் இன்னொருவரும் குதிரைமேல் ஏறி நாட்டின் எல்லைப் புறத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம் என்று புறப்பட்டார்கள். குதிரைகள் களைத்துப் போயின! அதனால் ஒரு குளத்தின் ஓரமாக நிறுத்தி அவற்றிற்கு தண்ணீர் காட்டினார்கள். அந்தக் குளத்தின் ஓரமாக ஒருகுடிசை இருந்தது. அந்தக் குடிசைக்குள் ஒரு பெண் அழுகிற சத்தம். உள்ளே போய்ப்பார்த்தால் அந்தப் பெண் தூக்குப் போடக் கயிற்றைக் கட்டிக் கொண்டிருந்தாள். ராஜாவுடன் இருந்தவர் உடனே ஓடிப்போய் அந்தக் கயிற்றை வெட்டி விட்டு 'ஏனம்மா இப்படி ஒரு முடிவுக்கு வந்தாய்?' என்று கேட்டிருக்கிறார்.

''என்மானத்தை காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் இப்படிப் பண்ணினேன்'' என்றாள் அந்தப் பெண். உனக்கு அப்படி ஒரு நிலை வராதம்மா! ஏனென்றால் இப்போது இருக்கிற நமது ராஜா மிக நல்லவர். அதுமட்டுமில்லை. மிகவும் திறமையான ஒருவர். நமது நாட்டுப் படைகளுக்குத் தளபதியாக இருக்கிறார். அதனால் உனக்குஒரு கஷ்டமும் வராதம்மா! தைரியமாக இரு'' என்றார்.

''அப்படி இல்லை ஐயா! எனக்குக்கஷ்டம் கொடுப்பதே நீங்கள் சொல்கிற அந்தத் தளபதிதான்''? என்றாள் அந்தப் பெண். இதை அந்த ராஜா குடிசைக்கு வெளியே நின்று கேட்டுக் கொண்டிருந்தார். மறுநாள் சையும் களவுமாக அந்தத் தளபதியைப் பிடித்தார். கோபமாகப் பார்த்தார், 'தளபதியே! என்னுடைய ஆட்சியில் என்னுடைய அதிகாரிகளே இப்படி நடந்து கொள்வதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. இந்த நிமிஷமே உன்னை வேலையிலேயிருந்து நீக்குகிறேன், இந்த நாட்டின் எல்லைக்குள்ளே நீ இருக்கவே கூடாது உடனே வெளியேறு' என்று உத்தரவு போட்டார்.

உடனே பக்கத்திலே இருந்தவர் ராஜாவைப் பார்த்துச் சொன்னார், 'மன்னா! இந்த தளபதி மிகவும் திறமையானவர். அப்படிப்பட்ட ஒருவரை நாம் இழப்பது நல்லதல்ல கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்' என்றார். அதற்கு அந்த ராஜா என்ன சொன்னார் தெரியுமா? நீ சொல்வது சரிதான்! இருந்தாலும் ஒரு நல்ல தளபதியை நாம்இழந்து விட்டால், வேறு ஒரு நல்ல தளபதியை நாம் கண்டு பிடிக்கலாம், ஆனால் ஒரு பெண்ணுக்கு அநீதி நடந்துவிட்டால் அதன்பின்னர் நமது புகழ் எதற்குஆகும்?' என்றார்.

அப்படிச் சொன்ன அந்த ராஜா யாரென்று நினைக்கிறீர்கள்? வீரசிவாஜிதான் அப்படிச் சொன்னார். இப்படிப்பட்ட மன்னர்களும் இந்த உலகத்திலே இருந்திருக்கிறார்கள்.

இதற்கு நேர்மாறான மன்னர்களைப் பற்றியும் சுவாரஸ்யமாகச் சில கதைகள் உண்டு அப்படித்தான் ஒரு ராஜா இருந்தார். அவருக்குச் சொந்தமாக யோசிக்கிற திறமை மிகவும் குறைவு. அவருக்கு காலில் அக்கிவந்து விட்டது. கடிபடை என்று சொல்கிறார்களே அது மாதிரி, மிகவும் தொந்தரவாக இருந்தது. உடனே அரண்மனை வைத்தியரைக் கூப்பிட்டார். இதற்கு என்ன செய்யலாம் என்று யோசனை கேட்டார். இது என்ன பெரிய காரியம்? பொடுதலையை வைத்துக் கட்டினால் சரியாய்ப் போய் விடும்! என்றார் வைத்தியர், அப்படிச் சொல்லிவிட்டு அவர் போய் விட்டார் அது ஒரு பச்சிலை. வைத்தியர் போனதன் பின் ராஜாவுக்கு ஒரு சந்தேகம்வந்தது.' அது சரி.. இந்த வைத்தியர் பொடுதலை என்று சொன்னாரே.: அப்படியென்றால் என்னவென்று! அது ஒரு பச்சிலை என்பது அவருக்குப் புரியவில்லை. உடனே ஒரு புலவரைக் கூப்பிட்டார் ராஜா அவரிடம் பொடுதலை என்றால் என்ன என்று கேட்டார். அவர் யோசித்துப் பார்த்து விட்டு பொடுதலை, என்றால் முடி இல்லாத தலை என்று விளக்கம் சொல்லி விட்டுப் போய் விட்டார். உடனே ராஜா தளபதியைக் கூப்பிட்டார். நம் நாட்டில் சுத்தமாக முடியில்லாத ஒருவனைப் பார்த்துக்கூப்பிட்டுக்கொண்டு வா!' என்று உத்தரவு போட்டார்.

அப்பாவியாகஒருவன்கிடைத்தான் அழைத்துக் கொண்டு வந்தார்கள். 'என்னைஎதற்கு அரண்மனைக்குக் கூட்டிக் கொண்டு போகிறீர்கள்?' என்று கேட்டான் அவன், ராஜாவுக்கு காலில் அக்கி. அதற்குப் பொடுதலையை வைத்துக் கட்டவேண்டும் என்று அரண்மனை வைத்தியர் சொல்லி விட்டார்; அது தான் உன்னை அழைத்துக் கொண்டு போகிறோம். உன் தலையைத் தான் வைத்துக்கட்டப் போகிறோம்' என்று சொன்னான் அரண்மனைச் சேவகன்.

அந்த ஆளுக்கு ஒரு திடீர் அதிர்ச்சி அதன் பின்மெதுவாகச் சமாளித்துக் கொண்டு, 'அது சரி! இந்த யோசனையைச் சொன்ன அரண்மனை வைத்தியர் வீடு எங்கேயிருக்கிறது?' என்று கேட்டான். 'அதோ தெரிகிறது பார்!' என்று வீட்டைக் காட்டினார்கள். உடனே இந்த ஆள் அந்த வீடு இருக்கிற திசையைப் பார்த்து சாஷ்டாங்கமாகக் கீழேவிழுந்து நமஸ்காரம்பண்ணினான். அங்கேயிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. 'ஏனப்பா இப்படிப் பண்ணுகின்றாய்?' என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த ஆள் 'இன்றைக்கு இப்போது நான் உயிரோடு இருப்பதற்கே அந்த வைத்தியர் தான் காரணம் அது தான் கும்பிட்டேன்' என்றான் எப்படி என்று கேட்டார்கள். நல்லவேளை அந்த வைத்தியர் நமது ராஜாவிடம் பொடுதலையை வைத்துக்கட்டுங்கள் என்று மட்டும் சொன்னார்; பொடுதலையை நசுக்கி வைத்துக் கட்டுங்கள் என்று சொல்லியிருந்தால் என்கதி என்ன ஆவது? என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பொதுஜன மாதாந்த உதவுதொகை நிறுத்துவது தொடர்பில் பரிசீலனை

(தென்மராட்சி)

சமூக சேவைகள் திணைக்களத்தினால் யாழ்ப்பாணக் குடாநாட்டில்வழங்கப்பட்டு வரும் பொதுஜனமாதாந்த உதவிப் பணத்தினை அதிகரிக்குமாறு யாழ்ப்பாணத்திலுள்ள சமூகசேவைகள் நலன் அமைப்புகள்சமூகசேவை திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வயது முதிர்ந்தவர்கள் மற்றும் வறிய நிலையில் வாழ்ந்து வருகின்றவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உதவு தொகையாகிய 100 ரூபாமுதல் 300ரூ. வரையிலான கொடுப்பனவு அவர்களின் ஒரு நாள்தேவைக்குக் கூடப் போதாமல் இருப்பதால் எவ்வித பயனும் கிட்டாமல் இருக்கின்றது.

பலவருடங்களுக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட தொகையே இப்போதும் வழங்கப்படுவதால் இதனைக் கொண்டு அவர்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே, முதியவர்களுக்கும் வறிய நிலையில் இருப்பவர்களுக்கும் வழங்கப்படும் மாதாந்தஉதவு தொகையைஆயிரம் ரூபாவாக வழங்கும்படி அவ் வேண்டுகோளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, சமூகசேவைகள் திணைக்களத்தினால் நாடுபூராகவும் வழங்கப்படும் பொதுஜன மாதாந்த உதவித் தொகையை நிறுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகசமூக சேவைகள் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. (உ-77)

## மீனவர் மாநாடு கொழும்பில்

(கொழும்பு)

மீன்பிடி இறங்குதுறை, மீன்பிடிசமாசங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கிடையிலான மீனவர் மாநாடு இம்மாதம் 16 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் மகிந்த விஜயசேகர தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா பிரதம அதிதியாக கலந்து கொண்டு, மீன்பிடித்துறையின் புதிய கொள்கைத் திட்ட நூல் ஒன்றையும் வெளியிட்டு வைக்கவுள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெறும் இந்த மீனவர் மாநாட்டுக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 15 ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-7)

## யாழ்ப்பாணத்தில் எயாலைன்ஸ் கிளை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா எயாலைன்ஸ் நிறுவனத்தின் கிளைஒன்று செலான்வங்கி கட்டடமேல் மாடியில் எதிர்வரும் 15ந் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

சிலிங்கோ பயணமுகவர் நிலையம் எயாலைன்ஸ்சுடன் இணைந்து விமானரிக்கெட்டுக்களை வழங்கிஅதன்சேவையை யாழ்ப்பாணத்தில் வழங்கவுள்ளது.

இந்நிறுவனமானது பிரயாணவசதிகள் டிக்கட் வசதிகள் மற்றும் தங்குமிடவசதிகள் என்பனவற்றை மக்களுக்கு வழங்கவுள்ளது.

இதே வேளை நிறுவனக்கிளை திறக்கப்படும் அன்றையதினம் யாழ்ப்பாண மத்தியகல்லூரியில் கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளது. (இ-5)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தீர்வைக்கு உட்படாத பொருட்களை விற்கும் தொழிலில் ஈடுபடும்சகலருக்குமான கலந்துரையாடல் இன்று பி.ப. 4 மணிக்கு அவர்களின் பகுதியில் உள்ள வர்த்தக சங்கங்களில் நடைபெறவுள்ளது.

நகைக்கடைஉரிமையாளர், நகைப்பட்டறை உரிமையாளர் நகை அடைவு பிடிப்போர், சீட்டுப் பிடிப்போர், அரிசி ஆலை உரிமையாளர், அச்சக உரிமையாளர், சிறுகைத்தொழில் உரிமையாளர், வீடியோ படப் பிடிப்பாளர், வீடியோ படவிநியோகஸ்தர், கடைச்சல் பட்டறை, வெல்டிங் பட்டறை, மோட்டார் வைண்டிங் கராஜ் உரிமையாளர், மரக்காலை உரிமையாளர், கருவாடு விற்பனை செய்வோர், ஹோட்டல் மற்றும் தேநீர்ச்சாலை ஆகிய தீர்வைக்குட்படாத பொருட்களை விற்போர் தவறாது இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு யாழ் மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் கேட்டுள்ளது. (இ-5)

## பொது வசதிகள் ஏற்படுத்தல் உள்ளூராட்சி சபைகளுக்கு விசேட சுற்றறிக்கை

(சுதுமலை)

பொது வசதிகளை ஏற்படுத்தல் என்ற விடயத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி யாழ். மாவட்டத்தில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் விசேட சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் விலங்கறுமனைகளின் சுத்தம் பேணல், வெட்டப்படும் விலங்குகளின் நிலை பொது இடங்களின்சுகாதாரம் குடிநீர் வசதி, கட்டாக்காலி நாய்களை ஒழித்தல், மற்றும் விசர் நாய் தடுப்பூசி ஆகியன குறித்த விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. (உ-252)

## 631 ஹெக்டேயரில் சின்ன வெங்காய உற்பத்தி

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வருடம்சின்ன வெங்காயத்தின் உற்பத்தி எதிர்பார்த்ததை விட அதிகரித்துள்ளதாக விவசாய விரிவாக்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சின்ன வெங்காய உற்பத்தி 587 ஹெக்டேயரில் மேற்கொள்ளப்படும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தபோதிலும் உற்பத்தி 631 ஹெக்டேயரில் இடம் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

ஏ9பாதை திறக்கப்பட்டதன் காரணமாகசின்ன வெங்காயம் பெருமளவில் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-77)

## கடற்றொழிலாளர்களுக்கான அ.அட்டை வழங்குவதில் அசமந்தப்போக்கு

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குவதில் அரசாங்கம் தொடர்ந்தும் பின்னடித்து வருவது குறித்து, கடற்றொழிலாளர்கள் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள கடற்றொழிலாளர்களுள் இதுவரை 25 பேருக்கு மட்டுமே கடற்றொழிலாளர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை. அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் இன்னமும் முழுமையாக வழங்கப்படாமல் இருப்பது குறித்தும் அறியப்படுகின்றது. (உ-77)

## பண்டத்தரிப்பில் இருந்து தென்மராட்சிக்குக் கள்ளு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம் பெற்ற யுத்தத்தின் போது தென்னை- பனை, மரங்கள் பல ஆயிரக்கணக்கில் அழிக்கப்பட்டதன் காரணமாக, சாவகச்சேரி பகுதியில் இருக்கும் சீவல் தொழிலாளர்கள் தமது தொழிலில் முன்பு போல ஈடுபட முடியாத நிலை உருவாகியுள்ளது.

தென்னை பனை மரங்கள் இல்லாமையினால் கள் உற்பத்திக்கான வாய்ப்புக்கள் பெருமளவில் அருகி உள்ள நிலையில், சீவல் தொழிலை மட்டுமே நம்பியிருக்கும் நூற்றுக்காணக்கான சீவல் தொழிலாளர் நிலை கேள்விக்குறியாகியுள்ளது.

இதன் காரணமாக சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் சாவகச்சேரிப் பகுதியில் இருக்கும் கள்ளுப் பிரியர்களின் தேவைகளை ஈடு செய்யும் பொருட்டு பண்டத்தரிப்பு, சங்கானைப் பகுதியில் இருந்து போத்தலில் அடைத்த கள்ளைத் தருவித்து சங்கத்தின் கூட்டுறவுக் கிளைகள் மூலம் விற்பனை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதே சமயம், சீவல் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களின் குடும்ப நலன்களைக் கருத்தில் கொண்டு மாற்றுத் தொழில் ஏதாவது அறிமுகப்படுத்த வேண்டிய நிலைமை உருவாகி வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-77)

# கனடாவில் ஈழத் தமிழர்

## சி. செல்லையா

உலகத் தலைவர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் கனடா

கனடாவில் தற்பொழுது 2 லட்சம் அளவில் இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்கள் ஒன்ராறியோ மொன்றியல், ஒட்டாவா, பிரிட்டிஷ் கொலம்பியா முதலிய மாகாணங்களில் வாழுகின்றனர். அனேகமானோர் ஒன்ராறியோ மாநிலத்தில் தான் வசிக்கின்றனர் ஒன்ராறியோவிலும் ரொறோன்ரோ பெரும்பாகத்தில் வசிக்கின்றனர். ரொறோன்ரோவிலும் ஸ்காபரோ நகரில்தான் மிகக் கூடியளவு மக்கள் வாழுகின்றனர்.

அனேகமானோர் 1983 ல் இலங்கையில் நடந்த இனக் கலவரத்தின் பின் தான் கனடா வந்தவர்கள். கனடாவுக்கு ஆரம்பத்தில் அரசியல் தஞ்சம் கோரி அகதிகளாகத் தான் பெரும்பாலானோர் வந்தவர்கள் 17 வருடங்களுக்குள் சகல துறைகளிலும் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றனர். ஆனால் ஒரு சிலர் தங்கள் சுயநலத்திற்காகத் தமிழ்ச் சமுதாயத்தின் பெயரைக் கெடுக்கின்றனர். குறிப்பாக இளம் சமுதாயத்தினர் சிலர் கோஷ்டிச் சண்டைகளில் ஈடுபட்டு எமது சமுதாயத்தின் நல்ல பெயருக்குக் குந்தகம் விளைவிக்கின்றனர்.

### பொருளாதார நிலை

அனேகர் ஆண்களும், பெண்களும் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கின்றனர். சிலர் குறிப்பாக பெண்பிள்ளைகள் வங்கிகளில் கடமை புரிகின்றனர் கனடா பல்கலைக்கழகங்களில் பயின்று பட்டம் பெற்றவர்கள் எஞ்சினியர்களாகவும், கணனி நிர்வாகத் துறையில் மேல்மட்ட உத்தியோகத்தவர்களாகவும் ஆசிரியர்களாகவும் வேறு பல பிரிவுகளிலும் வேலை பார்க்கின்றனர். கனடாவில் சிலர் வணிகத்துறையில் முன்னேறிச் செல்கின்றனர் இவர்களிற் சிலர் கனடாவின் முற்போக்கானதும், இலகுவான முறையில் கடன் வழங்கும் சட்ட திட்டங்களைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர். கடைகளைத் திறப்பதும், வங்கிகளில் கடனெடுப்பதும், சில மாதங்களில் வங்கிறோத் அடிப்பதும் போன்ற செய்கைகளால் உண்மையாக வர்த்தகம் செய்வோர் வங்கிகளில் கடனெடுப்பதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றார்கள்.

கனடாவில் ஆணும் பெண்ணும் வேலை செய்தால்தான் வீட்டு வாடகை, ஈடு, பிள்ளைகளின் பராமரிப்புச் செலவு, வாகனச் செலவு முதலியன கிரமமாகக் கட்டலாம். இவர்களின் வேலை நேரங்கள் ஒரே நேரமாக இருப்பதில்லை. சில குடும்பங்களில் ஆணும் பெண்ணும் ஒன்றாகக் கூடியிருப்பது ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம்தான். இப்படியான சூழலில் தம்பதிகளிடையே தேவையற்ற மனக் கசப்புகள் தோன்றுகின்றன.

### சைவக் கோயில்களும் ஈழத் தமிழர் அமைப்புகளும்

கனடாவில் 17 சைவக் கோயில்கள் உள்ளன. இவற்றுள் 15 கோயில்கள் ஒன்ரேறியா மாநிலத்தில் உள்ளன. அனேகமான கோயில்கள் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் உள்ளன. கோயில்களில் தமிழில் அர்ச்சனைகள், பூசைகள் நடைபெற வேண்டுமென்று கனடா இந்து கலாசார சபையால் தீர்மானம் இயற்றி சகல கோயில்களின் தர்மகர்த்தா சபைகளுக்கும். தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்ட மந்திரங்களுடன் அனுப்பப்பட்டது. இதற்கு முதலில் எதிர்ப்புகள் இருந்தாலும், தற்பொழுது மக்கள் விரும்பினால் அர்ச்சனைகள் தமிழில் செய்வதற்கு சிவாச்சாரியார்களும், தர்மகர்த்தா சபைகளும் இணங்கியுள்ளன. தமிழில பூசை செய்வதை எதிர்ப்பவர்கள், இறைவன் சமஸ்கிருதத்தில்தான் தன்னை எப்படி வணங்க வேண்டுமென்று கூறியிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்த வாதம் ஏற்புடையதாக இல்லை. படிப்படியாக எமது தெய்வங்களைத் தமிழில் வணங்கு வோமென்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்படும் காலம் வருமென்று கருதுகிறேன்.

ஈழத் தமிழர் அமைப்புகள் பல உள்ளன. கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, பழைய மாணவர் சங்கங்கள் வர்த்தக சம்மேளனம், எழுந்தாளர் இணையம் போன்றவை தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்கள் அனைவரையும் உலகரீதியில் இயக்கும் ஒரேஒரு இயக்கம் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் என்பதுதான்.

கனடாவைப் பொறுத்தமட்டில் அனேகமாக ஒவ்வொரு கிழமையும் ஏதோஒரு நிகழ்ச்சி தமிழில் நடைபெறுகிறது. காரணம் ஈழத்தமிழர் புலம் பெயர்ந்த நாடுகளில் கனடாவில்தான் அதிகளவு வாழ்கின்றனர். அதுவும் கடந்த 20 ஆண்டுகளுக்குள் தான் புலம்பெயர்ந்தவர்கள். தற்பொழுதுள்ள சந்ததியினருக்குத் தமிழ் அறிவுக்குக் குறைவில்லை. ஆனால் எமது இளம் சந்ததியினர் தமிழையும், தமிழ்ப்பண் பாடு கலை, கலாசாரம் ஆகியவற்றைத் தொடர்ந்து பேணிக் காப்பார்களா என்பது கேள்விக்குறி. இந்தப் பணியைப் பலவழிகளில் எமது பண்பாட்டு இயக்கம் முன்னின்று செய்ய வேண்டும்.

தற்பொழுது கனடா பல் கலாசார நாடென்றபடியால் கல்விக்கூடங்களில் சனி, ஞாயிறு தினங்களில் தமிழ் படிப்பதற்கு ஒழுங்குகள் செய்துள்ளனர். பல்கலைக்கழகம் அனுமதிக்கும் தமிழை ஒரு பாடமாக ஏற்றுள்ளனர். அரசாங்கம் தமிழ் படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கு மணித்தியாலத்திற்கு 30 டாலர் சம்பளமாகக் கொடுக்கின்றது. ஆகவே தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் கல்வி புகட்டுகின்றனர். பல்கலைக்கழக அனுமதி வகுப்பில் படிக்கும் தமிழ்ப் பிள்ளைகளின் தமிழறிவு சிறப்பாகவுள்ள தென்பது விவரமறிந்த கல்விமான்களின் கருத்து. இத் திட்டத்தைக் குழப்புவதற்குச் சில தனிப்பட்ட நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களில் சேர்ந்து படிக்கப் பிள்ளைகளின் பெற்றோரை நிர்ப்பந்திக்கிறார்களென்று அறிகிறேன். இச் செயல் உண்மையாயின் தமிழ்ச் சமூகத்தை வருங் காலத்தில் பெரும் பாதிப்புக்குள்ளாக்கும்: அரசாங்கம் தனது செலவில் தமிழைப் படிப்பிப்பதை நாம் வரவேற்க வேண்டும் ஆகவே தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை, தற்பொழுது நடைமுறையில் உள்ள அரசாங்கப் பள்ளிகளுக்குத் தமிழ் கற்க அனுப்ப வேண்டும்.

### கனடாவில் எமது சிறார்கள்

தமிழ்மொழி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியனவற்றைப் பேணிக் காப்பதற்குஒரு முழு நேரக்கல்விநிலையம் அவசியம். இந்த நிறுவனம் தற்பொழுதுள்ள கல்வித் திட்டத்தின் அடிப்படையில் தனியார் கல்விச்சபைஒரு சபை. சட்டப்படி பதிந்துஒரு நிறுவனத்தை ஆரம்பிக்கலாம் இதில் தமிழ்ப் பிள்ளைகளும் மற்றைய சமூகத்தினரும் ஆங்கிலம் மூலம் படிக்கலாம். தமிழையும், சைவ சமயத்தையும் திருக்குறளையும் பாடங்களாக முதலாம் ஆண்டு தொடக்கம்பல்கலைக் கழக அனுமதி வரை படிப்பிக்கலாம். அதுவரை தற்பொழுது நடைமுறையில் இருக்கும் தமிழ்க கல்வி கற்பிக்கும் அரசாங்கத்தின் உதவியைப்புறக் கணிப்பது நல்லதல்ல.

கனடாவில் பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் தேவைக்குக் கூடுதலாகவுள்ளன. அவைகள் யாவும் தங்கள் பணிகளைத் தொடர்ந்து மக்கள் முன்னேற்றத்துக்குச் செயற்பட வேண்டும்.

கனடாவில் வாழும் எம்மக்கள் தமிழீழம் கிடைத்தாலும் 10 சதவிகிதத்தினர் திரும்பிப் போவார்களோ என்பதுகேள்விக்குறி. ஆகவே எமது சமுதாயம் மற்றைய சமூகத்தினரோடு சரிசமமாக வாழ்வதற்கு, எங்கள் பிள்ளைகளைப் பட்டதாரிகளாகவும், எஞ்சினியர்களாகவும், டாக்டர்களாகவும், சிறந்த கலைஞர்களாகவும், கணனியில் சிறந்த வித்தகர்களாகவும் சட்ட வல்லுநர்களாகவும் உற்பத்திசெய்ய வேண்டும். அதே சமயம் அவர்கள் எமதுமொழி கலை, கலாசாரம் ஆகியவற்றை மறவாமலிருக்கவும் நாம் அத்திபாரம்போட வேண்டும்.

## இராசி பலன்

4.10.2002
(புரட்டாதி 18 வெள்ளி)
திரயோதசி மு.இ10.24 வரை
மகம் காலை 6 03 வரை
பூரம் பி இ 4 38 வரை
இராகுகாலம் 10.32- 12.02
நல்லநேரம் -602-7.32
பிரதோச விரதம்

**மேடம்**
செல்வாக்கு குறைவு புதிய முயற்சி வெற்றியளிக்கும், உடல்நலக் குறைவு, திடீர் நன்மை.

**இடபம்**
உஷ்ண வியாதி, வாகன சுகம், கல்வியில் ஆர்வம், அதிக பிரயாசை.

**மிதுனம்**
சகோதரர் வழி நன்மை, பிரயாண சுகம், அன்னியர் உதவி, குடும்ப மகிழ்ச்சி

**கடகம்**
மாதர் நட்பு, வாக்கு கலகம், செய் தொழில் விருத்தி, காரியச் செலவு.

**சிங்கம்**
தெய்வ சிந்தை, பெரியோர் ஆதரவு காரிய சித்தி, நல்ல உறவு சிறத்தல்.

**கன்னி**
காரிய அலைச்சல், உஷ்ண ரோகம், சுப செலவு பிரயாணம்.

**துலாம்**
குடும்ப சுகம், நல்ல லாபம், தெய்வ தரிசனம், கீர்த்தி

**விருச்சிகம்**
பெரியோர் சந்திப்பு, அதிக பிரயாசை, அதிகாரம், காரிய சித்தி.

**தனுசு**
தொழில் திருப்பம், கட்டுப்பாடு, புதிய சிந்தை, முயற்சி தாமதம்.

**மகரம்**
நண்பர்கள் விரோதம், காரிய தடங்கல் அபகீர்த்தி, போசன சுகம்.

**கும்பம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தெய்வ சிந்தை தொழில் விருத்தி, உறவினர் கலந்துரையாடல்.

**மீனம்**
நினைத்தகாரியம்கைகூடும், தெய்வ நம்பிக்கை, மன மகிழ்ச்சி செய்தொழில் விருத்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# இன்றைய சமாதான முயற்சிகளில் சிறுவர்களை ஈடுபடுத்த வேண்டும்

## பிரதிநிதி ஆலோசனை

(கொழும்பு)

சமாதான முயற்சிகளில் சிறுவர்களை பல்வேறு, வழிகளில் ஈடுபடுத்த வேண்டும். அவர்களின் ஆலோசனைகளும் அத்தியாவசிய மானவை.

ஐக்கிய நாடுகள் சிறுவர்நிதியத்தின் இலங்கைக்கானவதிவிடப் பிரதிநிதி டெட்சைபன் கொழும்பு டிரான்ஸ் ஏசியா ஹோட்டேலில் கடந்த செவ்வாயன்று, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டசிறுவர்குறித்த சர்வதேச மாநாட்டை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் இவ்வாறுகுறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்;

உள்நாட்டுப்போருக்குஅரசியல்தீர்வு காணும் முயற்சியானது இலங்கையில் இன்னுமோர் சந்ததி யுத்தத்தின் கொடூரங்களை அனுபவிக்கும் நிலை உருவாகுவதைத் தடுக்கும்.

இதுவரை கால மோதல்களில் பலியானவர்களில் 90 வீதமானவர்கள் பொதுமக்கள்.

மோதல்களால் பாதிக்கப்படும் மக்களின் தேவைகளுக்காக வழங்கப்பட்ட நிதியுதவிகள் துஷ்பிரயோகம் செய்யப்படும் நிலை காணப்படுகின்றது.

கடந்த தசாப்தத்தில் யுத்தம் காரணமாக உலக அளவில் 2 மில்லியன் சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 40 மில்லியன் சிறுவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

தவிர, இலட்சக்கணக்கானவர்கள் நிலக்கண்ணிவெடிகளினால் அங்கவீனர்களாகியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார். (உ)

## மூதறிஞர் சொக்கன் நாடு திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களின் அழைப்பினை ஏற்று இலண்டனுக்கு இலக்கியப் பயணம் செய்த மூதறிஞர் சொக்கன் கடந்த சனியன்று நாடு திரும்பினார்

சுமார் 3 மாத காலம் லண்டனில் தங்கியிருந்த இவர், அங்கு பல்வேறுஇடங்களிலும் இலக்கிய மற்றும் சமய சொற்பொழிவுகளையும்கருத்தரங்குகளையும் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிகள் நாளை ஆரம்பமாகின்றன

(யாழ்ப்பாணம்)

கல்வி மனிதவளஅபிவிருத்தி அமைச்சின் 2002 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டிகளின் முதலாவது கட்டம் நாளை ஆரம்பமாகவுள்ளது.

இம் முதற்கட்டப் போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் இடம் பெறவுள்ளதுடன், இதில் 14 நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இரண்டாம்கட்டப்போட்டி எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில்முறையே பம்பலப்பிட்டி இராமநாதன் கல்லூரியிலும், பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது. (உ)

## புத்தகக் கண்காட்சி

(கோப்பாய்

கோப்பாய்கிறிஸ்தவகல்லூரியில் நூலக வாரத்தைச் சிறப்பிக்கும் வகையில் புத்தகக் கண்காட்சியும் புத்தகச்சந்தையும் மேற்படி கல்லூரியில் எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரையான ஐந்து நாட்கள் நடைபெறவுள்ளன. (உ-79)

## கிளைக்குழுதெரிவு கூட்டம்

புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளைக்குழுக்களை தெரிவுசெய்வதற்கான கூட்டமொன்று5ந்திகதி நாளைசனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டத்தில் வாக்களிக்கத் தகுதியான அங்கத்தவர்கள் மற்றும் வன்னியில்இருந்து மீளக் குடியமர்ந்துள்ளவர்களில் வாக்களிக்கத் தகுதியானவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# ஊர்களில் ஆவிகளுமில்லை, பேய்களுமில்லை, மனித மனங்களே இவற்றை உருவாக்கியுள்ளன

**1932ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் மக்களின் மனோ நிலையையும், வாழ்க்கையினையும், மந்திரவாதிகளிடம் வைத்த நம்பிக்கையையும் விளக்கிச் சிந்தனைக்கு வழி காட்டுகின்றது இக்கட்டுரை (ஆ-ர்)**

யாழ்ப்பாணத்தின் தென்பகுதியில அமைந்துள்ள ஒரு சிறியதீவு. 1932ஆம் ஆண்டு ஏப்பிரல் விடுமுறையின் போது அங்கு சென்று சில நாட்களைக் கழிக்க எண்ணி, நெவின் செல்லத்துரை வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அங்கு போய்த் தங்கி யிருந்தேன். அழகிய கடற்கரையில் அமைந்திருந்த அந்த வீட்டில் என் மனைவியும் மகனும் தங்கியிருந்தனர். அப்பொழுது அவ்வூரில் புகையிலை விவசாயம் மட்டுமே நடைபெற்று வந்தது. இந்தத் தீவுமக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்தார்கள். நல்லூர் திருவிழாவின் போது மட்டுமே இம்மக்கள் யாழ்ப்பாணததிற்குச சென்றுவருவர்.

### மார்க்கண்டு ஆசிரியர்

இங்கு தங்கியிருந்த நாட்களில் நான் பிற்பகல் நேரங்களில் இத்தீவின் பல இடங்களுக்கும் சென்று பார்த்து வருவேன். ஒருநாள் அந்தத் தீவில் சட்டை அணிந்த ஒருவரைக் கண்டேன். அங்கு பொதுவாக எந்த ஆணுமே சட்டை அணிவதில்லை. நான் சந்தித்தவர் ஓர் ஆசிரியரென்றும், அவர் பெயர் மார்க்கண்டு என்றும் தெரிந்து கொண்டேன். இந்த அறிமுகத்திற்குப் பின்னர் ஓய்வு நேரங்களில் மார்க்கண்டு என்னைச் சந்திக்க வருவார். ஒருநாள் கையில் பெரிய பட்டியலொன்றை ஏந்திவந்தார்.

நல்லூரிலிருந்து ஒரு பிரபல சாமியார் வரவிருப்பதாகவும், அவர் இங்கு விசேட பூஜைகளை நடத்தி இந்தத் தீவில் உலவும் ஆவிகளையும் பேய்களையும் விரட்ட ஏற்பாடு செய்வாரென்றும், அதற்குப் பணம் சேகரிப்பதாகவும் தெரிவித்தார். மார்க்கண்டு கூறியவை எனக்கு மேலும் விபரங்களைக் கேட்கத் தூண்டியதால் இதுபற்றி விரிவாகக் கேட்டேன்.

இங்கு உலவும் ஆவி பல உருவில், பல இடங்களில் தோன்றுகிறதென்றும், குறிப்பாக 'சங்கிலி வைரவன்' போன்றும் 'மோகினி' போன்றும் அடிக்கடி தோன்றிப் பொது மக்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துகிறதென்றும் கூறினார் அவர். ஒரு நாள் இரவு ஒரு பெண் தனது வீட்டின் பின்புறத்தில் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்ற போது, அங்கொரு பெண்ணுருவம் நிற்பதைக் கண்டாள். இந்தப் பெண்ணும் தன்னைமறந்து அந்த உருவத்தின் பின்னால் நடக்க ஆரம்பித்தாள். சிறிது தூரம் சென்றதும் அந்த உருவம் மறைந்து விட்டது. இந்தப் பெண்ணும் மயங்கி விழுந்துவிட்டாள். கண் விழித்தபோது எவரையும் காணவில்லை. அன்றிலிருந்து அவளுக்குப் பேய் பிடித்துவிட்டது.

### அழகிய இளம் பெண்

இன்னொரு நாள் ஒரு இளைஞன் புகையிலை விவசாய வேலைகளை முடித்துவிட்டு, மாலை வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது எதிரே வந்த ஒரு அழகிய இளம் பெண் அவனை நெருங்கி, ''நான் பாதையைத் தவற விட்டு விட்டேன். தயவு செய்து என்னை வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று கெஞ்சினாள். அவனும் சரியென்று சம்மதித்து அவளுடன் பேசிக் கொண்டே நடந்தான். சிறிது தூரம் சென்றதும் அந்தப் பெண்ணின் உருவம் மறைந்துவிட்டது. குரல் மட்டும் கேட்டுக் கொண்டேயிருந்தது. இதனால் பயமடைந்த அந்த இளைஞன் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடினான். இடையில் ஓடும் நீரோடையில் தடுக்கி விழுந்த அவன், எழுந்து வீடுவந்தடைந்ததும் மயங்கி விழுந்து விட்டான். மறுநாள் காலையில்தான் சுய நிறைவு பெற்றான்.

### சிறுமி ஊமையானாள்

ஏழு வயதுச் சிறுமி ஒருத்தி தனது வீட்டு முற்றத்தில் கறுப்பு நிற நாயொன்றைக் கண்டு அதை விரட்டுவதற்கு கல்லொன்றை எறிந்தாள். அந்த நாய் திடீரென ''சங்கிலி வைரவன்'' உருவமெடுத்து மறைந்தது. அந்த வைரவனின் உடலில் மின்னிய சங்கிலியின் பயங்கரத்தைக் கண்ட அச்சிறுமி பயத்தாள். வீறிட்டாள். அவ்வளவு தான் அன்றிலிருந்து அவள் ஊமை.

இப்படிச் சில கதைகளை எனக்குக் கூறிய மார்க்கண்டு இதனால்தான் நல்லூர் சாமியை அழைத்து இந்தப் பேய், ஆவிகளை விரட்ட முடிவு செய்யப்பட்டதாகத் தெரித்தார். இந்தச் சாமியார் மிகவும் பிரபலம் வாய்ந்தவரென்றும். வருடம் முழுவதும் யாத்திரை செய்தவண்ணம் இருப்பாரென்றும், சில வாரங்கள் மட்டுமே நல்லூரில் இருப்பாரென்றும் மார்க்கண்டு மேலும் தெரிவித்தார்.

இதையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்ட நான் அந்தச் சாமியாரின் பூசை நடக்கும்போது என்னையும் அழைத்துச் செல்லும்படி மார்க்கண்டுக்கு வேண்டுகோள் விடுத்தேன். அடுத்த சனிக்கிழமை சாமியார் வருகிறாரென்று ஒருநாள் மார்க்கண்டு எனக்குத் தெரிவித்தார். அந்தச் சனிக்கிழமையும் வந்தது. பூஜைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நானும் அங்கு சென்றேன். ஒரு விவசாயின் வீட்டில் ஆண்களும் பெண்களும் பிள்ளைகளுமாகத் திரண்டிருந்தனர்.

### நல்லூர் சாமியார்

விசேடமாக அமைக்கப்பட்டிருந்த தரையாசனத்தில் அமர்ந்திருந்தார். தாடி வளர்ந்த அந்தச் சாமியார் காவி உடையும், உருத்திராட்சமாலையும் அணிந்திருந்தார். அவர் முன் பூஜைக்கான பல பொருட்களும், பாத்திரங்களும் வைக்கப்பட்டிருந்தன. மலர்கள் குவிக்கப்பட்டிருந்தன. அவரின் வலது பக்கத்தில் மூன்று கற்களாலான அடுப்பும் அதன்மேல் ஒரு பாத்திரமும் அடியில் சிரட்டைகளும் வைக்கப்பட்டிருந்தன. அருகில் ஐந்து போத்தல்களில் நெய், தேங்காயெண்ணெய், வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் ஆகியன வைக்கப்பட்டிருந்தன.

பூஜையை ஆரம்பித் சாமியார் சமஸ்கிருதத்திலும் தமிழிலும் மந்திரங்களை ஓதி, பூஜையை மேற்கொண்டார். இது சுமார் ஒரு மணிநேரம் நடந்தது.

இது முடிந்ததும் கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் ஆழ்ந்தார். .அவர் கண்கள் மூடியிருந்ததே தவிர வாய் அகலத் திறந்திருந்தது. நாக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. சாமியாரின் உதவியாளர் வெளியே நீட்டிக் கொண்டிருந்த நாக்கின்மீது கற்பூரவில்லையொன்றை வைத்துக் கொழுத்தினார். கொளுந்துவிட்டெரியும் கற்பூரத்தைச் சிறிது நேரம் நாக்கில் வைத்துக் கொண்டிருந்துவிட்டு அடுப்பின் மீதிருந்த பாத்திரத்தின் மீது துப்பினார் சாமியார். இதேபோல் மூன்று முறை நடந்தது. இது நடந்தபோது அங்கு குழுமியிருந்தோரெல்லாம் ''ஹரிஹரோஹரா'' எனக் கோஷம் எழுப்பினர். இதன் பின்னர் சாமியார் தியானத்தில் ஆழ்ந்தார்.

### நாடித்துடிப்பு

பத்மாசனம் போட்டு அமர்ந்த சாமியார் தன் கைகளை ஊன்றி அந்தரத்தில் நின்றார். பின்னர் மார்க்கண்டை அழைத்து தனது நாடியைப் பார்க்கும்படி சொன்னார். நாடியைப் பிடித்துப் பார்த்த மார்க்கண்டு, ''சுவாமி நாடித் துடிப்பு வேலை செய்ய்வே இல்லை'' என்று கூக்குரலிட்டார். உடனே அங்கிருந்த அனைவரும் ''ஹரிஹரோ ஹரா'' எனக் கோஷமிட்டனர். ஓரிருவர் சுவாமியின் நாடியைப் பிடித்துப் பார்த்த பின்னர் நானும் பார்த்தேன். அவரின் நாடி மெதுவாகத் துடித்து நின்றது. அடுத்து சிறிது அதிகரித்தது. இப்படியே மாறி மாறி நடந்தது. இது முடிந்ததும் அடுப்பின் மீது வைத்திருந்த பாத்திரத்தில் ஐந்து வகை எண்ணெயையும் ஊற்றி, சில தேசிக்காய்களைப் போட்டுக் கீழிருந்த சிரட்டைகளைப் பற்ற வைத்தார். எண்ணெய் கொதித்ததும் தனது வலது கையால் கொதிக்கும் எண்ணெயைத் தொட்டு அங்கிருந்த அனைவரதும் நெற்றியிலும் தடவினார். இதுவும் செய்து முடிக்கப்பட்ட பின்னர், தனது பையிலிருந்து நன்கு சீவிப் பொலிஷ் செய்யப்பட்ட சிரட்டை ஒன்றை எடுத்த சாமியார், ஒரு சிறு போத்தலில் இருந்த் தீர்த்தத்தையும் எடுத்தார்.

அடுத்து ஏழு கடல் சிப்பிகளையும் எடுத்து அருகில் வைத்துக் கொண்டார். இந்தச் சிரட்டைதான் இந்தவூர். இந்தச் சிப்பிகள் தான் இங்கு உலவும் ஆவிகளும் பேய்களும். இவற்றை இந்தச் சிரட்டை மேல் வைத்து இந்தத் தீர்த்தத்தை ஊற்றுவேன். இந்தச் சிப்பிகள் இதிலிருந்து இறங்கிச் செல்லும். அப்படிச் சென்றால் இந்தத் தீவில் உள்ள ஆவிகள் ஓடி விடுகின்றன என்பதே அர்த்தம் என்று கூறிவிட்டுச் சொல்லியபடியே செய்தார். அவர் சிப்பிகளை வைத்துத் தீர்த்தத்தை அவைமீது ஊற்றியதுமே சிப்பிகள் நகர்ந்து ஒன்றன் பின் ஒன்றாகக் கீழிறங்கிச் சென்றன. ஆவிகள் ஓடி விட்டன என்று சாமியார் மகிழ்ச்சியுடன் அறிவித்தார். இந்த அறிவிப்பை அடுத்து அங்கு ஒரே மகிழ்ச்சி பொங்கியது. ரூபா 501 பணத்துடனும் (1932ஆம் ஆண்டுப் பெறுமதி), பல பரிசுகளுடனும் மறுநாள் யாழ்ப்பாணத்துக்குப் பயணமானார் சாமியார்.

### அற்புதங்களைச் செய்து காட்டல்

அன்றே மார்க்கண்டு என்னைச் சந்தித்துப் பார்த்தீர்களா சாமியாரின் அற்புதச் செயல்களை என்று கேட்டார். நாளை மாலை இந்தத் தீவின் முக்கிய பிரமுகர்களை அழைத்து வாருங்கள். நானும் அந்த அற்புதங்களைச் செய்து காட்டுகின்றேன் என்றேன். இதையடுத்துப் பூஜைக்குத் தேவையான சகல பொருட்களையும் சேகரித்தேன். கடற்கரையில் சிப்பிகளையும் சேகரித்தேன். சிரட்டையையும் பொலிஷ் செய்தேன். எண்ணெய் வகைகளும் சேகரிக்கப்பட்டன. குறிப்பிட்ட தினத்தில் மார்க்கண்டு தனது நண்பர்களுடன் வந்தார். அவர்கள் முன் சாமியார் செய்த அத்தனை அற்புதங்களையும் நானும் செய்து காட்டினேன். எல்லோரும் பிரமித்துப் போயிருந்தனர். இதில் அற்புதம் எதுவும் இல்லையென்று கூறிய நான், இந்த அற்புதங்களைப் பற்றித் தெளிவாக விளக்கிக் கூறினேன்.

நூறு டிக்கிரிக்கு மேல் உஷ்ணம் அதிகரித்தால் மட்டுமே மனிதன் எதையும் தொடுவது கடினம். ஆனால், சாமியார் கலந்த ஐந்து வகை எண்ணெய்களும் எவ்வளவு கொதிக்கவைத்தாலும், நூறு டிகிரிக்கு மேல் உஷ்ணம் கூடாதவையாகும். அதனால்தான் அவர் கொதிக்கும் எண்ணெயில் கையைத் தங்கு தடையின்றி வைத்தார். நானும் அதைத் தான் செய்தேன். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் சாமியார் கொதிக்கும் எண்ணெயில் தேசிக்காய்களைப் போட்டதுதான். இந்தத் தேசிக்காய் எப்பொழுதும் உஷ்ணத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியுடையவை இதனால்தான் எண்ணெய் கொதித்தாலும் உஷ்ணம் நூறு டிகிரிக்கு மேல் கூடவில்லை.

கற்பூரமும் இப்படி உஷ்ணக் கட்டுப்பாடு கொண்டதுதான். அதனால்தான் பலரும் எரியும் கற்பூரத்தைக் கையில் ஏந்துவதை நாம் பார்க்கிறோம். இதேபோன்று தான் சாமியார் எரியும் கற்பூரத்தை நாக்கில் வைத்து ஊதினார் நானும் செய்தேன். அடுத்த அற்புதம் சிரட்டை மேலிருந்த சிப்பிகள் கீழிறங்கிச் சென்றன. சாமியார் சிற்பிகள் மேல் ஊற்றிய தீர்த்தம் வினாகிரிதான். சிப்பிகள் கல்சியம் காபனேற் கலப்புடையவை. வினாகிரி அல்லது தேசிக்காய்ச் சாறு சிட்ரிக் அசிட் கலப்புடையவை. கல்சியம் காபனேற் மீது சிட்ரிக் அசிட் விழுந்ததும். இந்தக் கலப்பால் கண்ணுக்கு தெரியாத வகையில் இவை பொங்கி எழுந்தன. இந்தச் சக்தியால் சிரட்டையின் மேலிருந்த சிப்பிகள் உயர்த்தப்பட்டுச் சிரட்டையை விட்டு வழுக்கிக் கீழே சென்றன.

**டாக்டர் ஏபிரஹாம் கோவூர்**

### உண்மையறிந்து மகிழ்ந்தனர்

இரசாயத்தின் சக்தியால் தான் இது நடந்தது. இதைத் தெரிந்து வைத்திருந்த சாமியார் அற்புதமாகக் காட்டிவிட்டார். நானும் அதையே செய்தேன். இதை நீங்களும் செய்து கொள்ளலாம். இதற்காக நூற்றுக் கணக்கான ரூபாவைச் செலவு செய்திருக்க வேண்டியதில்லை என்று கூறி முடித்தேன். இதையெல்லாம் கவனமாகக் கேட்ட மார்க்கண்டும், நண்பர்களும் உண்மைகளை அறிந்ததில் மகிழ்ச்சியும், சாமியாரிடம் ஏமாந்ததில் கவலையும் அடைந்தனர். கடைசியாக நான் அந்த ஊரில் ஆவியுமில்லைப் பேயுமில்லை. எல்லாவற்றிற்கும் மனம்தான் காரணம் என்று கூறி, இனிமேல் எந்த ஆவியையாவது கண்டால் பயந்து ஓடாமல் அருகில் சென்று பாருங்கள். எல்லாமே தெளிவாகிவிடும், என்று கூறி அவர்களை அனுப்பிவைத்தேன். அந்த விடுமுறை நல்லதொரு காரியத்துக்குப் பயன்பட்டது எனக்கு மனநிறைவைக் கொடுத்தது.

* * *

## விசேடபாதுகாப்புப் பிரிவை அமைக்க அமைச்சரவை முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவையும் அமைச்சர்களுக்கான பாதுகாப்பு பிரிவையும் இணைத்து விசேட பாதுகாப்புப் பிரிவை அமைக்க (Special Protection Division) அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

பிரதமரால் முன்வைக்கப்பட்ட இந்தப் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. (உ)

## 85 பேர் தெரிவு

(கொழும்பு)

கஷ்டப் பிரதேசங்களில் ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் அதிபர்களுக்கு விசேட புலமைப்பரிசில் மூலம் அவர்களுக்கு உலக நாடுகளில் மூன்று வாரகால பயிற்சி வழங்கப்படவுள்ளது.

வட- கிழக்கிலுள்ள ஆயிரத்து 966 பாடசாலைகளிலிருந்து 85பேர் இப்பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஜப்பான், இந்தியா, கொரியா, இஸ்ரேல் ஆகிய நாடுகளில் அங்குள்ள கல்விமுறைகள் தொடர்பாக பயிற்சிகளைப் பெறவுள்ளனர். (உ-3)

## அஸ்கிரிய பீடாதிபதியிடம் ஆசி

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயன்ல் பலகல்ல நேற்றுக் காலை அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்து ஆசி பெற்றதுடன்,

நாட்டில் தற்பொழுது மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும் பீடாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை, நேற்றுக்காலை யாழ்ப்பாணத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மல்வத்தைப் பீடாதிபதி ரம்பு குவலவபசிறீ மகா நாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.(உ-10)

## படம் எடுத்தவர் இனம் காணப்பட்டார்

(கொழும்பு)

பலாங்கொடையில் கடற்படை தளபதி ஒருவரின் இல்லத்தை வீடியோப்படம் எடுத்தவர்களில் ஒருவர் இலங்கை கடற்படை உத்தியோகத்தர் என்று நேரில் கண்டவர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

கொழும்பு கடற்படை தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற அடையாள அணிவகுப்பில் இவர் இனம் காணப்பட்டார்.

அப்பகுதியில் வசிப்பவர்கள் கடற்படைத் தளபதியின் இல்லத்தை ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி இரு நபர்கள் படம் எடுத்ததாக பொலிசாரிடம் முறையிட்டிருந்தனர்.

அடையாளம் காணப்பட்ட கடற்படை உத்தியோகத்தர் சிரேஸ்ட கடற்படை உத்தியோகத்தர் ஒருவரின் மெய்காவலர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## கூடைப்பந்தாட்டம்

(மட்டக்களப்பு)

இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் 19 வயதிற்கு உட்பட்ட மாணவர்களிற்கான அகில இலங்கை ரீதியிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர் வரும் 6, 7, 8ஆம் திகதிகளில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

20 வருடங்களிற்கு பின் மட்டக்களப்பில் நடைபெறும் இந்த அகில இலங்கை ரீதியிலான சுற்றுப் போட்டியில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் 16 பாடசாலைகள் கலந்துகொள்ளவுள்ளன. (உ-10)

## வழிகாட்டல் வகுப்பு

(நீராவியடி)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ நற்பணி மன்றத்தினரால் வருடந்தோறும் நடாத்தப்படும் க.பொ.த (சாதாரண) தர மாணவர்களுக்கான சகல பாடங்களுக்குமான வழிகாட்டல் வகுப்புக்கள் இம்முறையும் இலவசமாக நடாத்தப்பட்டு வருகின்றன.

இதில் ஆர்வமுள்ள மாணவர்கள் எவரும் கலந்து பயன் பெறமுடியும் என சைவ நற்பணி மன்றத்தின் தலைவர் தி. துஷிபரதன் அறிவித்துள்ளார். (உ-265)

# மீளக் குடியமர்ந்த தென்மராட்சி மக்கள்

# குடிக்கும் நீருக்காக தினமும் அலைச்சல்

(தென்மராட்சி)

தென்மராட்சிப்பிரதேசத்தில் தற்போது மீளக் குடியமர்ந்துள்ள சுமார்15 ஆயிரம்குடும்பங்கள் குடி நீர் பெறுவதில் பெரும்சிரமங்களையும் இன்னல்களையும் அன்றாடம் எதிர்நோக்கிவருகின்றன.

இப் பிரதேசத்தில் மொத்தமாகவுள்ள 11 ஆயிரத்து 695 கிணறுகளில் 3 ஆயிரத்து 434 கிணறுகளில் மட்டுமே நல்ல குடிநீரைப்பெறக்கூடிய நிலை காணப்படுகின்றது.

ஏனைய கிணறுகளில் 4 ஆயிரத்து 222 கிணறுகளில் உப்பு நீரும் 2 ஆயிரத்து 331 கிணறுகளில் சவர் நீருமே காணப்படுகின்றன. இதன் காரணமாக பெரும்பாலான கிராமங்களில் இருப்பவர்கள் தமக்குத் தேவையான குடிநீரைப் பெறுவதற்கு வேறு இடங்களுக்கும் செல்ல வேண்டிய நிலைமை உள்ளது.

இதே வேளை, சாவகச்சேரி பிரதேசசபை அதன் எல்லைக்குட்பட்ட கிராமங்களில்இருக்கும் நூற்றுக் கணக்கான பொதுக்கிணறுகளுள் சுமார் 50 பொதுக் கிணறுகளை நிக்கோட் திட்டத்தின் கீழ் புனரமைப்புச்செய்வதற்கென அடையாளம் கண்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள நிலத்தடி நீர் மிகவேகமாக சவர்த்தன்மையைப் பெற்று வருவதாகவும் இன்னமும்சில ஆண்டுகளின் பின் இப் போது நன்னீராகக் காணப்படுகின்ற நீரும் சவராகவும்,உப்பாகவும் மாறிவிடக் கூடியஅபாயநிலை காணப்படுவதாகப் புவியியலாளர்களால் சுட்டிக் காட்டப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

## காவல்துறை வீராங்கனை சாவடைந்தார்

(கிளிநொச்சி)

சுகவீனம் காரணமாக தமிழீழ காவல்துறையின் சிறப்பு படையணி வீராங்கனை ஒருவர் சாவடைந்துள்ளார்.

கொக்குத் தொடுவாய் மணலாறைச் சொந்த முகவரியாக கொண்ட சௌந்தரராஜா ராதிகா என்பவரே கடந்த முதலாம் திகதி சாவடைந்துள்ளதாக புலிகளின்குரல்வானொலி அறிவித்துள்ளது. (உ-10)

## பனைகள் தறிப்பதில் படையினர் ஈடுபடவில்லை

### யாழ். தலைமையகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, இடைக்குறிச்சி போன்ற பகுதிகளில் படையினர் பனை மரங்களைத் தறித்து வருவதாக வெளியான செய்தியை படைத்தரப்பினர் மறுத்துள்ளனர்.

மேற்படி செய்தி முற்றிலும் தவறானது என யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மந்துவில் விவசாயிகளுக்கு சேவா லங்கா நிறுவனம் விதை நெல் வழங்கும்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள வரணி வடக்கு மந்துவில் பகுதிகளைச் சேர்ந்த 700 விவசாயிகளுக்கு தலா இரண்டு புசல்விதை நெல்லை வழங்குவதற்கான ஏற்பாடுகளை சேவாலங்கா நிறுவனம் செய்து வருகின்றது.

அத்துடன்,யாழ். மாவட்டத்தில் 12 ஆயிரம், கைபிரைட் ரக தென்னங்கன்றுகளையும் சேவாலங்கா நிறுவனம் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-77.)

## ச. ச. நிலையங்களுக்கான நிதி இவ்வாண்டு அதிகரிப்பு

(சுதுமலை)

வலிகாமம் தென் மேற்கு (மானிப்பாய்) பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 76 சனசமூக நிலையங்களிற்கு எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பிரதேச சபையில் வைத்து இவ்வருடத்திற்கான சனசமூக நிதி வழங்கப்படவுள்ளதாக வலி-தென்மேற்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி உதவியாளர் செ. ரமேஸ் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட எல்லா சனசமூ நிலையத் தலைவர் மற்றும் செயலாளர்களிற்கும் இவ்விடயம் தொடர்பாக தனித் தனியே கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது கூடுதலான நிதி வழங்கப்பட உள்ளதும் இதன் பிரகாரம், A தர சனசமூக நிலையத்திற்கு ஆயிரத்து 600 ரூபாவும் B தரசனசமூக நிலையத்திற்கு ஆயிரத்து 400 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் A தர சனசமூக நிலையத்திற்கு ஆயிரத்து 200 ரூபாவும், B தர சனசமூக நிலையத்திற்கு ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-252)

## அரச காணிகளில்வசிப்போர் காணி உறுதியை பெற ஐ. நா. உதவி வழங்கும்

(புத்தளம்)

வட மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்ட அரச காணிகளில் குடியமர்ந்துள்ளவர்களுக்கான காணி உறுதிகளைபெற்றுக் கொடுப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகம் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தவுள்ளது.

புத்தளம் தொகுதிக்கு கடந்த செவ்வாய்க் கிழமை விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான அமைப்பின் பாதுகாப்பு அதிகாரி பொப்ரே கோர்டி, புத்தளம், பாலவி சபா - மர்வா இடம் பெயர்ந்த மக்கள் வசிக்கும் முகாம்களுக்குவிஜயம் செய்து அங்குள்ள நிலமைகளை நேரில் கேட்டறிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

புத்தளம்மாவட்ட இணைப்பு அதிகாரி சட்டத்தரணி ஏ.எம். கமறுதீன் இது தொடர்பில் தகவல் தெரிவிக்கையில்;

இடம் பெயர்ந்த மக்கள் சுமார் 114 முகாம்களில் குடியமர்த்தப்பட்டுள்ளநிலையில், இதில் அரைவாசிக்கு மேற்பட்ட முகாம்களில் வசிக்கும் மக்கள் அரச காணிகளில் கடந்த 8 வருடங்களாக வாழ்ந்து வரும் நிலையில், அவர்களது உரிமைகள் பல மறுக்கப்பட்டு வந்துள்ளன.

இது குறித்து ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான அமைப்புடன் தொடர்பு கொண்டு, இக் காணிகளை அங்கு வசிக்கும் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சொத்துக்கள் சம்பந்தமான பணிகளுக்கு பொறுப்பாகபிரண்டண்பீஸ், என்ற அதிகாரியை ஐ. நா அகதிகளுக்கானஉயர் ஸ்தானிகர் அலுவலகம்நியமிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ)

## பனம் பண்ட உற்பத்தியில் நாட்டம்

(துன்னாலை)

பனம் பண்ட உற்பத்தியில் தென்மராட்சி மற்றும் வடமராட்சி மக்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இடம்பெயர்ந்து சென்ற இப்பகுதி மக்கள் மீளக்குடியமர்ந்ததைத் தொடர்ந்தும், பனம் பண்டங்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளதை அடுத்துமே இவ்வாறு மக்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர். (உ-41)

## சந்தேகநபர்களுக்கு விளக்க மறியல்

(கொழும்பு)

மயிலந்தனைப் படுகொலைச் சம்பவ சந்தேகநபர்களான 18 இராணுவத்தினரையும் வழக்கு விசாரணை முடியும்வரைவிளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். ஸ்ரீஸ்கந்தராசாநேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

1992 ஆம் ஆண்டு மயிலந்தனைப் பகுதியில் 35 பொது மக்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் 6 பேர் படுகாயமடைந்திருந்தனர்.

மேற்படி படு கொலைச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை இன்றும் நடைபெறவுள்ளது. (த)

## உதவு தொகை வழங்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கிவருகின்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யுத்த காலத்தில் பல்வேறுவிதமான நஷ்டங்களையும் இழப்புகளையும் சந்தித்தமைக்காக வேண்டி அவற்றின் எதிர்கால அபிவிருத்திக்கு உதவும் பொருட்டு ஒவ்வொரு சங்கத்துக்கும் தலா ஒருமில்லியன் ரூபா வழங்கப்படவேண்டும் என தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (உ-77)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித்தொடரில் ஆர். ஸ்ரீநிவாசன் இயக்கிய குறும்படமான 'அடிமைகளின் தேசம்' என்னும் திரைப்படமும், 'ஞானரதன்' இயக்கிய ஈழத்துத் திரைப்படமான 'முகங்கள்' என்னும் திரைப்படமும் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைமு.ப10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளன.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## பெரும்போகச் செய்கைக்கு விவசாயிகள் ஆயத்தம்

(துன்னாலை)

மாரி மழை ஆரம்பித்திருப்பதையடுத்து குடாநாட்டு விவசாயிகள் பெரும்போகச் செய்கைக்கான முன்னேற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களை விட இம்முறை கூடுதலான அளவு நிலப்பரப்பில் பெரும்போகச் செய்கை இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

படையினர் கட்டுப்பாட்டில் இருந்த பயிர் செய்நிலங்களில் ஒருபகுதி உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-41)

## மட்டு. சிறைக் கைதிகளும் உண்ணாவிரதத்தில் இன்று குதிப்பர்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு சிறைக்கைதிகளும் இன்றுமுதல் சாகும் வரைஉண்ணாவிரதத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை, களுத்துறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 139 பேர் நேற்று மூன்றாவது நாளாகவும் தமது விடுதலை தொடர்பாக உரிய தரப்புகளுடன் சந்திப்பை ஏற்படுத்தக்கோரி நீராகாரம்கூட அருந்தாது உண்ணாவிரதம் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## அரசியல் நிலைபற்றி ஆராய காங்கிரஸ் செயற் குழு ஞாயிறு கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

அகிலஇலங்கை தமிழ்காங்கிரஸ் கட்சியின் செயற்குழு எதிர்வரும் 6ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை கட்சியின்தலைவர் அ. விநாயகமூர்த்தி தலைமையில் வடமராட்சிக் கிளையில் கூடவுள்ளது.

இன்றைய அரசியல் நிலை பற்றி ஆராயும் நோக்கில் இக் குழு கூடவுள்ளது.

செயற்குழு உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜி. கஜேந்திரகுமார்உட்படபலரும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## சிங்கப்பூருடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

(கொழும்பு)

சிங்கப்பூருடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றில் இலங்கை விரைவில் கைச்சாத்திடவுள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணா நாயக்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கை வந்திருந்த சிங்கப்பூர் தேசிய பாதுகாப்பு அமைச்சர் செற்றிக் பியூலிக் உடன் சந்தித்து உரையாடிய பின்னர் அமைச்சர் ரவி கருணாநாயக்கா இதனை அறிவித்துள்ளார்.

தற்பொழுது இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் காணப்படும் வர்த்தக உறவுகள் மேலும் வலுப்படுத்தப்படுவதுடன், நாட்டில் சிங்கப்பூரின் முதலீடுகள் பற்றியும் அமைச்சர் இச் சந்திப்பில் விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## சமாதான முயற்சிகளுக்கு ஜேர்மன் அரசு ஆதரவு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் முன்னெடுத்துச் செல்லும் சமாதான நடவடிக்கைகளுக்கு ஜேர்மன் அரசாங்கமும் மக்களும் பூரண ஆதரவு வழங்குவார்கள் என இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜெயன் எலியாஸ் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் தேசிய தினத்தை முன்னிட்டு கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் ஜேர்மனுக்குமான நட்புறவு தொடர்ந்து நிலைக்கும் எனக்கூறிய அவர், இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்பட வேண்டும் என்பதில் ஜேர்மன் அக்கறையாக செயற்படுவதாகவும்,

சகல இனங்களுக்கும் ஏற்ற தீர்வு காணப்பட வேண்டும் என்பதே அனைவரது விருப்பமாகும் எனவும் தெரிவித்தார். (உ-7)

## பொலிஸ் சேவை புனரமைப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் இடம் பெறும் குற்றச் செயல்களை தடுக்கும் முகமாக பொலிஸ் சேவையை புனரமைக்க தீர்மானித்துள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் பொலிஸாரிற்கும் பொது மக்களிற்கும் இடையே நல்லுறவு அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளார். (உ-10)

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

குறள்

# வலம்புரி

## மூன்று பெரும் சிக்கல்!

அரசும்-விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தம் செய்து கொண்டு சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தினாலும் அரசு மூன்று பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது.

சிறைக்கைதிகளின் விடுதலை, மீளக்குடியமர்தல், காணாமல் போனோரின் நிலை ஆகிய மூன்று பெரும் விடயங்களே அவையாகும். மேற் கூறப்பட்ட இம் மூன்று பெரும் சிக்கல்களுக்கும் தகுந்த முறையில் தீர்வு காணத் தவறின் அதன் விளைவு பாரதூரமானதாக இருக்குமென்பது சொல்லித் தெரிவதல்ல.

மீளக்குடியமர அனுமதிக்குமாறு ஒரு புறத்தில் மறியல் போராட்டம்; விடுதலை செய்யக் கோரி சிறைகளில் உண்ணாவிரதம்; காணாமல் போனோரை மீட்டுத் தாருங்கள் எனக் கெஞ்சிக் கண்ணீர் விடும் உறவுகள் இம் மூன்று முக்கிய பிரச்சினைகளும் சாதாரணமானவை அல்ல. நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமாயின், சமாதானம் மலர வேண்டுமாயின் ஒவ்வொரு பிரஜையும் தமது சொந்த இடங்களில் குடியமர்வதும் அங்கு இயல்பு நிலை ஏற்படுவதும் மிக மிக அவசியமாகும்.

அதேபோன்று சமாதானம் என்பது சிறைகளுக்குள் அகப்பட்ட மனிதங்கள் விம்மி வெதும்பும் போது ஏற்படக் கூடிய தொன்றல்ல.

இனரீதியான அடக்குமுறையின் அடிப்படையில் சிறைக் கைதிகளை வைத்திருக்கும் நாட்டில் சமாதானம் ஏற்பட்டதாக வரலாறில்லை. அதேபோன்று காணாமல் போனவர்களின் உண்மை நிலையை அவர்களின் உறவினர்களுக்குத் தெரியப்படுத்தும் வரை எந்தப் பேச்சுக்களும் வெற்றி தருவது கடினம் என்பது வரலாறு நமக்குப் புகட்டிய பாடமாகும். எனவே இலங்கை அரசு நாட்டில் சமாதானத்தை அடைய விரும்புமாயின் மீள்குடியேற்றம், சிறைக்கைதிகள், காணாமற் போனோர் தொடர்பான விடயங்களில் கனதியான முடிவுகளை எடுப்பது மிக மிக அவசியமாகும்.

தவறும் பட்சத்தில் இப்பிரச்சினைகள் விஸ்வரூபமெடுத்தால் அதனை எந்தச் சக்தியாலும் கட்டுப்படுத்த முடியாதென்ற உண்மையையும் காலம் உணர்த்த முன் உணர்ந்து கொள்வது நன்று.

# யாக சாலையில் ஓமத் திரவியங்கள் கொண்டு நவகுண்ட வழிபாடாற்றுவர் நான் மறையாளர்

## வெள்ளி நற்சிந்தனை

### சிவ. சண்முகவடிவேல்



யாகம் செய்வதற்குரிய இடம் யாகசாலை அல்லது யாக மண்டபம் எனப்படும்.

யாகசாலை தோரணங்கள், தர்ப்பைகள், மாலைகள், மலர் மாலைகள், முத்து மாலைகள், கொடிகள், சாமரங்கள், பட்டுக்களால் பரிமளிக்கும். கமுகு, நாரத்தை, எலுமிச்சை கரும்பு மூங்கில் இளநீர், வாழை, என்பவற்றால் அலங்கரிக்கப்படும்.

உயரமான குத்து விளக்குகள் யாக சாலைக்கு ஒளி பெருக்குவன. யாக சாலையின் நான்கு திக்குகளிலும் நான்கு வாயில்கள் வகுக்கப்படும். வாயில்கள் தோறும் தோரணம் தர்ப்பை மாலை அழகு ஊட்டும். வாயிலின் நடுவிலும் பக்கங்களிலும் தனித்தனி சூலங்கள் காணப்படும்.

#### கலை மயம்

மஞ்சள், சிவப்பு, நீலம், வெள்ளை ஆகிய நிறங்களாலான கொடிகள் எட்டுத் திக்குகளிலும் நிலவும்.

தர்ப்பணம், பூரணகும்பம் முதலிய அட்ட மங்கலப் பொருட்களை ஊர்வசி, மேனகை முதலிய தேவ மகளிர் தாங்கி நிற்பது போலச் சித்திரிக்கப் பெறும்.

யாகசாலை கலாமயமாகும் நிவிர்த்திகலை முதலிய நான்கும் நான்கு பக்க நிலையாகும் நந்தி முதலிய எண்மர் வாயில் காப்பாளராவர்.

சூரியன், வாஸ்து, பிரமன், மகாலட்சுமி, விநாயகர், சதாசிவர் முதலாய குரு மூர்த்திகளைப் பூசிப்பதற்கு 27 கலசங்கள் வைக்கப் பெறும். ஞானவாள் தாங்கி யாகேஸ்வரன், யாகேஸ்வரியைக் கலசத்தில் வருவிப்பர்.

#### எட்டு வடிவங்கள்

சிவபிரானுக்குரிய எட்டு மூர்த்தங்களுள் யஜமான மூர்த்தம் ஒன்று யஜமானன் யாகரூபி கும்ப பூசை, ஹோமம் நிகழ்வதற்குப் பிரதானம் வேண்டப்படுவது யாகம்.

யாகசாலை உள்ள பூமி கூர்மாசனம் எனப்படும் அதற்கு மேல் வேதிகை

அதற்கு மேல் மகா வேதிகை அதில் நெற் பொரி, பயறு, உழுந்து, கடலை, தாமரையிலுள்ள உறுப்புக்களாகும். அதன் மீது பிரதான குடும்பம் நிறுவப்படும்.

யாக மண்டபத்தில் 9 குண்டங்கள் அமைக்கப்படும், சிவபெருமான் உலகனைத்தையும் உள்ளடக்கிய 9 வடிவங்களாக உள்ளமையை அது உணர்த்தும். 36 தத்துவங்கள் ஆசனங்களாக அமையும்.

இறைவன்எண் வடிவங்களாக உள்ளமையைத் திருத்தாண்டகம்தெளிவு படுத்தும்;

''இருநிலனாய்த் தீயாகி
நீருமாகி இயமானனாய்
எறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய்
ஞாயிறாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி
ஆகிப்
பெருநலமுங் குற்றமும்
பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவுந்
தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி
நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள்
நின்ற வாறே

அதனைத் திருவாசகம் பின்வருமாறு உணர்த்தும்.

''நிலம் நீர் நெருப்புயிர்
நீள்விசும்புநிலாப்பகலோன்
புலனாயமைந்தனோடெண்
வகையாய்ப்புணர்ந்து நின்
றான்''

சதுர வடிவில் கிழக்குத் திக்கில் அமையும் குண்டம் நிலத்தைக் குறிக்கும். முக்கோண வடிவில் தென் மேற்கு மூலையில் அமையும் குண்டம் அக்கினியைக் குறிக்கும். தெற்குத் திசையிலுள்ள பிறைவடிவக் குண்டம் நீரை உணர்த்தும். தென்கிழக்கில் அமையும் அரசிலை வடிவமான குண்டம் ஆன்மதத்துவத்தை வெளிப்படுத்தும். அறு கோணவடிவாக வடமேற்கு மூலையில் உள்ள குண்டம் காற்றை உணர்த்தும். எண்கோண வடிவமாக வடகிழக்கு மூலைக் குண்டம் சந்திரனை நினைவூட்டும். தாமரைப் பூவடிவத்தில் வடக்குத் திக்குக் குண்டம் சூரியனைச் சுட்டும். வட்ட வடிவமாக மேற்குத் திக்குக் குண்டம் ஆகாசத்தை அறிவுறுத்தும், ஈசானத்திற்கும் கிழக்குத்திசைக்கும் நடுவணாக வட்ட வடிவில் விளங்குவது பிரதான குண்டம். அது இறைவனுடைய திருவடிவத்தைத் தெளிவு படுத்தும். அட்ட மூர்த்தத்தை எட்டுக்

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சந்திரன், சூரியன் ஆன்மாவாக இறைவன் புணர்ந்துள்ளான்.

#### நவகுண்டங்கள்

இறைவனை எட்டு வகையில் வழிபடும் தன்மையை நவகுண்டம் நன் குணர்த்தும்.

குண்டத்தில் ஓமம் செய்து வணங்கப்படுகின்றது.

விசேட திரவிய ஓமத் திரவியங்களையும் இறை மயமாக்கி அதற்குரிய மந்திரங்களோடு பஞ்சப் பிரம மந்திரமும் வியாகிருதியும் சேர்த்து உச்சரித்து அக்கினி காரியம் நிறைவேற்றப்படும்.

#### ஓமத்திரவியங்கள்

பலாசு, கருங்காலி, அரசு, அத்தி, நெய், அன்ன வகை' பழவர்க்கங்கள், கிழங்கு வகைகள், கராம்பு, கரும்பு, தேன், நெல், அரிசி, நவதானியம், வாசனைத் திரவியங்கள், மலர்கள், தாம்பூலம் போன்றவை விசேட ஓமத் திரவியங்களுள் சிலவாகும்.

''நெய்தவழ் மூவெரி காவ
-லோம்பு
நேர்புரி நான்மறை யாள
ரேத்த
''தோலொடு நூலிழை
சேர்ந்த மார்பர்
தொகுமறை யோர்
கள்வ ளர்த்தசெந்தீ
மால்புகை போய்விம்மு
மாடவீதி
''மந்திர வேதங்க ளோது
நாவர்

போன்ற வாக்குகள் 1ம் திருமுறையில் திருமருகலும் திருச்செங்காட்டங் குடியும் திருப்பதிகத்தில் வருவன. யாக காரியத்திற்குத் துணை நிற்பன.

அக்கினியில் மூர்த்திகளை ஆவாகனம் செய்வர். அக்கினியுடன் பிரதான கும்பம் தொடர்பு படுத்தப்படும். விசேட திரவிய ஹோமம் நிகழ்ந்த பின்பு மகா பூர்ணாகுதி நடைபெறும். அக்கினியில் வழிபடப் பெற்ற இறைவனைக் கும்பத்தில் ஒடுக்குவர். அதனைத் தொடர்ந்து திருமுழுக்கு நிகழ்த்துவதற்கும் பிரதான கும்பம் சகல ஓசை ஒலிகளுடன் வீதிப்பிரதட்சணம் நிகழும்.

# பிரதான உழைப்பாளரை இழந்த 3368 தென்மராட்சி குடும்பங்கள் வருவாய் ஏதுமின்றித் தவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 60 கிராமசேவையாளர் பிரிவுகளில் மொத்தமாக 3 ஆயிரத்து 368 பிரதான உழைப்பாளர்களை இழந்தபெண்கள் வாழ்ந்துவருவதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்மூலம் தெரிய வந்துள்ளது.

16 வயதில் ஒருவரும், 17 வயதுக்கும் 30 வயதுக்குமிடையில் 215 பேரும், 30 வயதுக்கும் 50 வயதுக்குமிடையில் 1204 பேரும் 50வயதுக்கு மேற்பட்ட நிலையில் ஆயிரத்து 948 பேரும் இவ்வாறு இனம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 2 ஆயிரத்து37 பெண்கள் தமது பிரதான உழைப்பாளர்களை வன்முறைகள் மற்றும் யுத்தநடவடிக்கைகள் காரணமாக இழந்துள்ளனர்.

இதேசமயம், பிரதான உழைப்பாளர்களை இழந்துவிட்ட நிலையில், ஏதொரு உதவியுமின்றி இக்குடும்பங்கள் தமது அன்றாட ஜீவனோபாயத்துக்கும், தமது பிள்ளைகளின் கல்விச்செலவுக்கும் பெருங்கஷ்டங்களை அனுபவித்துவருவதாகவும் தெரியவருகின்றது.

தம்மைப்போன்ற பெண்களின் வருமானமீட்டும் செயல்திட்டங்களுக்கான மூலதனத்தினை வழங்குவதற்கு எத்தகைய அமைப்புகளும் இதுவரை முன்வரவில்லைஎன இப்பெண்கள்சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான உழைப்பாளர்களை இழந்துவிட்டநிலையில் இருக்கும் 17 வயதுக்கும் 50 வயதுக்கும் உட்பட்டபெண்கள் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு தமக்கு ஆர்வமும், விருப்பமும் இருக்கின்றபோதிலும், நிதிஆதாரஉதவியற்றநிலையில் எத்தகைய வருமானமீட்டும் முயற்சிகளிலும் ஈடுபடமுடியாதநிலை உள்ளது என்பதை சுட்டிக்காட்டியுள்ளனர்

இது இவ்விதமிருக்க இத்தகைய பெண்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு அரசோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களோ இதுவரைமுன்வரவில்லை என்பதும்குறிப்பிடத்தக்கது.

(உ-77)

## தினசரி தியானம்

### 'ஓம்' என்னும் மந்திரதியானம்

'ஓம்' என்ற படத்தை உங்கள் முன்வையுங்கள்: நன்றாகக் கண்களைத்திறந்து அப்படத்தைப்பார்த்துக் கொண்டு அதிலேயே நாட்டம் செலுத்துங்கள். இம்மந்திரம்பற்றி எண்ணும்போது நிலை பேறுடைமை, எல்லையின்மை, இறப்பின்மை முதலிய எண்ணங்களை ஒன்றுசேருங்கள். 'ஓம்' என்பது வேதங்களின் சாரம். 'ஓம்' என்பது வில்என்றும் 'மனம்' என்பது அம்பு என்றும் இறைவன்தான் இலக்குஎன்றும் கற்பனை செய்துபாருங்கள். இலக்குடன் அம்பு ஒன்றிவிடுவது போல நீங்கள் கடவுளுடன் ஒன்றிவிடுவீர்கள்.

சுவாமி சிவானந்தர்

## நிவாரணத்தில் பருப்பு இல்லை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் தற்போது வழங்கப்பட்டுவரும் நிவாரணத்தில் 5 பேருக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு பருப்பு வழங்கப்படவில்லையென புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-75)

குடாநாட்டின் மனித உரிமைகளை அவதானிக்க

# அமைச்சர் மகிந்த தலைமையிலான குழுவினர் நேற்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் மனித உரிமை நிலைமைகள், யுத்த அழிவுகள் மற்றும் புனரமைப்பு விடயங்கள் குறித்த விபரங்களைத் திரட்டிக் கொளளும் பொருட்டு நேற்று தொழில் அமைச்சர் சமரசிங்க தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம வருகை தந்தனர்.

இக்குழுவில் வடக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா, மனித உரிமை ஆணைக்குழுவின தலைவர் ஹொட்டிறி குணதிலக மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற தேர்வுக் குழு உறுப்பினர்கள், மனித உரிமை ஆணைக்குழுப் பிரதிநிதிகள், மற்றும் அதிகாரிகள் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இவர்களுடன் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஆகியோரும் இணைந்து கொண்டனர்.

முற்பகல் 10.30 மணிக்கு யாழ் அரச செயலகத்தில் இக் குழுவினர் காணாமல் போனோர் சங்கப் பிரதிநிதிகள், அன்னையர் முன்னணி அரச சார்பற்ற நிறுவனப்பிரதி நிதிகள், வர்த்க சமூகத்தவர்கள், மதத் தலைவர்கள் எனப் பலவேறு தரப்பினருடனும் கலந்துரையாடினர்.

மக்கள் எதிர்நோக்குகின்ற பொதுப பிரச்சினைகள், குடாநாட்டில் மனித உரிமை பேணப்படுகின்ற தன்மை, அதில் காணப்படுகின்ற குறைபாடுகள், யுத்த நிறுத்தத்துக்குப் பின்னர் மனித உரிமை மீறல்கள் எவ்வாறு இருக்கின்றனஎன்பது குறித்து இக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

காணாமல் போன உறவுகளைத் தேடிக் கண்டுபிடிக்க மனித உரிமை ஆணைக்குழுவில் தனிப பிரிவு ஒன்று அமைக்கப்பட வேணடும் என்றும், காணாமல் போன உறவுகளைக் கண்டுபிடித்து தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், அதற்குப் பதிலாக நஷ்டஈடு எதுவும் தமக்கு வேண்டாம் என்றும், காணாமல் போன உறவுகள் இன்னமும் படை முகாம்களிலும், சிறைக் கூடங்களிலுமே இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையுடனேயே தாம் இருப்பதாகவும் காணாமல் போனோர் சங்கப் பிரதிநிதிகள் இக் கலந்துரையாடலில் வேதனையுடன் தெரிவித்தனர். இதற்குப் பதிலளித்த மனித உரிமை ஆணைக் குழுவின் தலைவர் ஹொட்றிக் குணதிலக கருத்துத் தெரிவிக்கையில்;

காணாமல் போனவர்களின் உறவுகள் அனுபவிக்கும் துன்பதுயரங்களை, வேதனைகளை நாம் நன்கு உணர்கின்றோம். அவர்கள் எதிர நோக்குகின்ற பிரச்சினைகளை அறிந்து கொண்டே இருக்கின்றோம். இன்னமும் ஆறு மாதகாலத்துக்குள் காணாமல் போனவர்களின் நிலைமை குறித்து ஆராய்ந்து உறுதியான முடிவை அறிவிப்போம் என்று உறுதியளித்தார். (இ-6)

## புலிகள் தடுத்து வைத்துள்ள படையினரை கண்காணிப்புக்குழு பார்வையிட்டது

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆறு படையினரையும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேற்றுக் காலை சந்தித்து அவர்களின் சேமநலன் குறித்து விசாரித்துளளனர்.

திருகோணமலையில் உள்ள கும்புறுப்பிட்டி எனும் இடத்தில் இச சந்திப்பு இடம்பெற்றது.

விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பிரமுகர்களான திலக் மற்றும் ராஜேஸ் ஆகியோர் இச்சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர்.

போர்நிறுத்தக்கண்காணிப்புக குழுவின் திருமலை மாவட்டத் தலைவர் மற்றும் செஞ்சிலுவைச் சங்கத் திருமலை மாவட்ட பிரதிநிதிகளான லீனாமெரினர், லிண்டன் பொண்ட் ஆகியோர் படையினரை தனித்தனியாக சந்தித்து சேமநலன் குறித்து விசாரித்தனர்.

புலிகளால் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் படையினரை ,அவர்கள் நன்றாகக் கவனிப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மகிழ்ச்சி தெரிவித்துளளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படையினரின் விபரங்களை உடனடியாக தனக்குத் தெரியப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணித்துள்ளார். (இ)

## கொக்குவில் இந்துவின் பரிசளிப்பு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளைத் தலைவர் க.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி கே.விஜயலட்சுமி வழங்குவார். (ந)

### பொலிஸ்மா...

பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.பொலிஸ்மா அதிபராக கடமை யாற்றிய லக்கி கொடித்துவக்கின மரணத்தின் பின் பொலிஸ்மா அதிர் பதவியை நிரப்புவதில் இழுபறி நிலை காணப்பட்டது.

பொலிஸ்மா அதிபராக கடமை யாற்றிய முதற் தமிழர். ருத்திரா இராஜசிங்கத்தின் பின் இரண்டாவது தடவையாக பொலிஸ்மா அதிபராக கடமை ஏற்றிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். ரி.ஈ.ஆனந்தராசா தனது ஆரம் பக்கல்வியை மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரியிலும், பட்டப் படிப்பை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும், ஜெயவர்த்தனாபுர பல்கலைக் கழகத்திலும் மேற்கொண்டார். (ம)

### திருக்கோவிலில் பெண் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

இனந்தெரியாதோரினால் அம்பாறை திருக்கோவிலைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் இச்சம்பவம் பிரஸ்தாப பெண்ணின் வீட்டில் இடம் பெற்றது.ஸ்ரீதரன் மேகலா (வயது 36) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவர்.

### தலைவர்....

காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் வன்னிக்குச் செல்லவுளளார்.

அடுத்த வாரம் விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்திக்க அரச தரப்பு பிரதிநிதிகள் மற்றும் நோர்வே அரச பிரதிநிதிகள் வனனிக்குப் படை எடுப்பதால் வன்னிப பெரு நிலப்பரப்பில் பெரும் சந்திப்புக்கான ஏற்பாடுகள் இடம பெற்று வருவதாக தெரியவருகிறது.

இதேவேளை முதற் தடவையாக அரச தரப்பு அமைச்சர் ஒருவர் புலிகளின் தலைவரை சந்திக்கவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### வன்னியில்...

கின்றது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் இருந்து வன்னிக்கு விடுதலைப் புலிகளை தரை மார்க்கமாகவும் அழைத்துச் சென்றமை தெரிந்ததே.கடந்த ஒகஸ்ட் மாதம் 18ந் திகதி விடுதலைப் புலிகளின் முதலாவது கடற் பயணம் நடைபெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### கைதிகளின்.....

பல்வேறு அமைப்புக்களினாலும் உறுதி மொழிகள் வழங்கப்பட்டன. எனினும் எவரும் விடுதலை பெறவில்லை.

**யுத்த நிறுத்த காலத்திலும் விடுதலைக்கு ஏங்கும் கைதிகள்**

யுத்த நிறுத் உடன் படிக்கையின் பின் அமைதியான சூழ் நிலை கடந்த 8 மாதங்களாக ஏற்பட்டுளள போதிலும் தாம் இன்னமும் விடுவிக்கப்படாமல் இருப்பது குறித்து தமிழ்க் கைதிகள் ஏமாற்றமும், வேதனையும் அடைந்துள்ளார்கள் இதன் காரணமாக தென் இலங்கைச் சிறைகளில் வாடுகின்ற தமிழ் இளைஞர், யுவதிகள் தம்மை விடுவிக்கக் கோரி கடந்த 1ம் திகதி முதல் சாகும் வரையிலான உண்ணவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

பல வருடங்களாக சிறையில் வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக இளைஞர்களும்,யுவதிகளும் உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுளளனர். அவர்கள் தமது எதிர்காலம் குறித்து எவ்வித நம்பிக்கையும் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

சிலர் தமது எதிர் கால வாழ்வு சூனியமாக மாறிவிடுமோ என்ற அச்சத்தில் உள்ளனர்.

**பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்**

தென் இலங்கைச் சிறைகளில் வாடுகின்ற தமிழ் இளைஞர்களினதும் யுவதிகளினதும் நீதியான நியாயமான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு மதிப்பளித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, அவர்களின் விடுதலையை விரைவுபடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையில் மக்களின் நம்பிக்கையும் எதிர்பார்ப்புக்களையும் கருத்தில் கொண்டு தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் உடனடியாக விடுதலை செய்வது அவசியமாகும்.

தமிழ்க் கைதிகள் தமது விடுதலையை வேண்டி மேற்கொண்டுள்ள உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, மனிதஉரிமை ஆணைக் குழுக்கள், ஏனைய பொது அமைப்புக்கள் தமது ஒத்துழைப்பை வழங்கி அவர்களது விடுதலைக்கு உதவ வேண்டுமெனவும் அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (ம)









அமைச்சர் மகிந்த தலைமையில் நேற்று யாழ். வந்த குழுவினர் யாழ் செயலகத்தில் நடத்திய மாநாட்டின் போது எடுக்கப்பட்ட படங்கள். (படம் வே.தவச்செல்வன்)

### குடியமர....

வலிவடக்குப் பகுதி மக்களை மீளக் குடியமர்த்துமாறு கோரி யாழ மாவட்ட இராணுவத் தளபதிக்கு கடந்த 25ந் திகதி வரை கால அவகாசம் வழங்கிக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அக் கடிதத்திற்கு இதுவரை ஆக்கபூர்வமான பதில் எதுவும் தரப்படவில்லை.

இந்த நிலையில் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தக்கோரி எதிர்வரும் 18ந் திகதி தொடக்கம் தொடர் மறியல போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி மறியற் போராட்டத்திற்கு வேறு எந்த அமைப்புக்களினதும் ஆதரவைக் கோரப் போவதில்லை என்றும் தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை மட்டுமே தாம் கோரப்போவதாகவும் ஒன்றியத் தலைவர் குமாரவேல் நேற்றுத் தெரிவித்தார். (த)

### தமிழீழ....

புதிய பொலீஸ்மா அதிபராக பதவி ஏற்ற ரி.ஈ ஆனந்தராசா நேற்று பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அப்பத்திரியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் அரசும் விடுதலைப் புலிகளும் நடத்திவரும் பேச்சுக்கள் வெற்றியளித்தால் விடுதலைப்புலிகளின் கீழ் இயங்கும் தமிழீழக் காவல்துறையினரை பொலீஸ்படையில் இணைத்துக் கொள்வதற்குத் தயாராக உள்ளோம் என்று குறிப்பிட்டார்.

இம்மாநாட்டை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா ஆகியோரையும் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராசா சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

மரம் மண்ணின் வரம்!
மனிதன் மரத்தின் வரம்!!!

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான
நல்லெண்ணெய்
V.S.P லஞ் ஒயில்
தயாரிப்பாளர்
[illegible]
26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை வலம்புரி அன்: கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.